# கல்வெட்டில் தேவார மூவர்

பேராசிரியர்

கா. ம. வேங்கடராமையா

# கல்வெட்டில் தேவார மூவர்


**பேராசிரியர்**

**கா. ம. வேங்கடராமையா**



**சேகர் பதிப்பகம்**

66, பெரியார் தெரு, எம். ஜி. ஆர். நகர்,

சென்னை - 600 078.

போன் : 55 38 30 00

முதற் பதிப்பு : 2005

விலை ரூ. 28 /-

ஒளி அச்சு : சூர்யா கம்ப்யூட்டர்ஸ்
தி. நகர், சென்னை - 17.
போன் : 24349827.

அச்சிட்டோர் : ஸ்கிரிப்ட் பிரிண்டர்ஸ், சென்னை - 24

# உள்ளுறை


முன்னுரை - 4

ஆசிரியர் அறிமுகம் - 5

1. திருஞான சம்பந்தர் - 11
2. திருநாவுக்கரசர் - 30
3. சுந்தர மூர்த்திகள் - 47
4. மூவர் ஆலயங்கள் - 67
5. மூவர் திருஉருவச் சிலைகள் - 71
6. திருவாரூர்த் திருக்கோயிலில் - 75
7. குகைகள் திருமடங்கள் - 79
8. திருஞானசம்பந்தர் திருமடங்கள் - 81
9. திருநாவுக்கரசர் திருமடங்கள் - 84
10. சுந்தரர் திருமடங்கள் - 86
11. பிற செய்திகள் - 87
12. வரலாற்றுப் பட்டியல் - 90

# முன்னுரை

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில - திருக்குறள்

''கல்வெட்டில் தேவார மூவர்'' என்ற இச்சிறிய பெரிய நூல் சமயத்துறையில் விளங்குவோர்க்கும், கல்வெட்டுத் துறையில் பயில்வோர்க்கும் பெரிதும் பயன்படும் என்பது உறுதி.

தென்னகத்தில் சைவ சமயத்தைப் புரந்த சோழர்கள் ஆட்சியில் தென் தமிழ் மக்கள் சைவசமய குரவரிடத்து எவ்வளவு பற்றுடன் திகழ்ந்தனர் என்பதும், அன்னோருடைய அருட்பாடல்களில் தோய்ந்து இருந்தனர் என்பதும் இந்நூல் நன்கு தெரிவிக்கும்.

இதனைப் புத்தக வடிவில் வெளிவரச் செய்கிறவர்கள், சேகர் பதிப்பக உரிமையாளர் திரு. வெ. சுந்தரம் அவர்கள் ஆவர். அன்னாருக்கு நன்றிக் கடனுடையேன்.

தமிழகப் பெருமக்கள் இந்நூலைப் பயின்று மூவர் பெருமைகளை அறிந்து உய்க.

அன்பன்,
கே. எம். வேங்கடராமையா

# ஆசிரியர் அறிமுகம்

பேராசிரியர் **கா. ம. வேங்கடராமையா**

வளமான வாழ்வின் சுருக்கம்

தமிழறிஞர் கா. ம. வேங்கடராமையா அவர்கள் சென்னை பூவிருந்தவல்லியை அடுத்த காராம்பாக்கம் என்னும் சிற்றூரில் 4. 4. 1911இல் பிறந்தார். இவரின் தாயார் பெயர் வேங்கட சுப்பம்மா; தந்தையாரின் பெயர் கிருஷ்ணையா; தாய்மொழி தெலுங்கு.

சென்னை இலயோலாக் கல்லூரியில் பி.ஏ., (பொருளாதாரம்) படித்த இவர் தமிழ் வித்துவான் தேர்விலும் வென்று செங்கற்பட்டு தூய கொலம்பா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். அதுபோது சென்னைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல்., பட்டமும், எம்.ஏ., பட்டமும் வென்று விளங்கினார். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் தொடங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் தமிழ்க்கல்லூரியின் முதன் முதல்வராகப் பொறுப்பேற்று இருபத்தெட்டாண்டுகள் அரும்பணியாற்றித் தமிழகத்திற்குப் பல்லாயிரம் புலவர் பெருமக்களைப் புலமைக் கொடையாக வழங்கினார். தம் மக்களையும் தமிழ்ப்புலவர்களாக ஆக்கியது இவரின் தனித்தன்மையாகும். இவ்வகைக்கும் இவர்தம் பிற தமிழ்ப் பணிகளுக்கும் உற்சாமூட்டிப் பெருமை சேர்த்தவர் இவர்தம் துணைவியார் அன்னபூரணி என்பதை இங்குக் குறிப்பிட்டாக வேண்டும்.

பணி ஓய்வுக்குப் பிறகும் தமிழ்ப்பணிக்கு ஓய்வில்லை என்ற உறுதியுடன், சென்னையில் அன்றைய ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்களின் தனிப்பார்வையில் இயங்கிய தமிழ் சமஸ்கிருதம் மற்றும் பிறமொழிகள் ஆய்வு நிறுவனத்தில் பணிபுரிந்தார். அதுபோது அவரியற்றிய பன்மொழி இலக்கண ஒப்பீட்டாய்வுகள் இன்னமும் வெளியிடப் பெறவில்லை.

பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் இருக்கையில் ஆய்வுப்பணிகள் மேற்கொண்டார். அதன்பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதற்பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.

இறுதியாகத் திருவனந்தபுரத்தில் இயங்கிவரும் பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தில் பணிபுரிந்தார். 31. 1. 1995 அன்று வானுறையும் தெய்வத்தோடு ஒப்பச் சேர்ந்தார்.

## பட்டங்களும் ஆற்றிய பணிகளும்

சிவநெறிச் செல்வர் (மதுரை ஆதீனம்), கல்வெட்டாராய்ச்சிப் புலவர் (தொண்டை மண்டல ஆதீனம்), செந்தமிழ்க் கலாநிதி (தருமை ஆதீனம்), சைவத் தமிழ் ஞாயிறு (அருள்நெறித் திருக்கூட்டம்), தமிழ்மாமணி (பெங்களூர்த் தமிழ்ச் சங்கம்) ஆகிய சிறப்புப் பட்டங்கள் இவருக்கு வழங்கப் பெற்றன.

பல பள்ளிகளின் தாளாளர், கல்லூரிகளின் தாளாளர் மற்றும் பல்கலைக் கழகங்களின் பொறுப்புகள் வகித்தவர் இவர். குமரகுருபரர் திங்களிதழின் நிர்வாக உறுப்பினராக ஐம்பதாண்டுகட்கும் மேலாகப் பணிபுரிந்த பெருமையும் இவருக்குண்டு.

## கட்டுரை நூல்கள்

இலக்கியக் கேணி என்னும் இவரின் கட்டுரை நூல் பல்வேறு காலங்களில் எழுதிய இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாகும். வரலாறு, கல்வெட்டுகள் தொடர்புடன் இலக்கியக் கட்டுரைகள் படைக்கும் இவரின் தனித்தன்மையை இக்கட்டுரைகளில் காணலாம்.

சோழர்கால அரசியல் தலைவர்கள் என்ற இவரின் இரண்டாவது நூலில் அருணிதிகலியன் தொடக்கமாகப் பதினான்கு அரசியல் தலைவர்கள் பற்றிய ஆய்வுகள் உள்ளன. சீயகங்கனின் இயற்பெயர் திரவேகம் பமுடையான் என்பது உட்பட நூற்றுக்கணக்கான புதுச் செய்திகள் இந்நூலில் உள்ளன.

கல்லெழுத்துக்களில் என்னும் நூலில் மூவேந்தர் காலங்களில் நுண்கலைகள் வளர்ந்த விதங்கள் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஆய்வுப் பேழை என்னும் இவரின் நூலில் 18 கட்டுரைகள் உள்ளன. இவை காஞ்சிக் கடிகை, தந்திசக்தி விடங்கியார் உள்ளிட்ட கலை வரலாற்றின் புதுச்செய்திகள் கூறுவனவாகும்.

கல்லெழுத்துக்களில் தேவார மூவர் என்னும் நூல் பல பதிப்புகள் கண்ட படைப்பாகும். தேவார மூவர் பற்றிக் கல்லெழுத்துக்கள்

கூறுவனவும் தேவார மூவர் நினைவை மக்கள் போற்றிய வகைமைகளும் இந்நூலில் நன்காய்ந்து கூறப்பெற்றுள்ளன.

## திருக்குறள் இருக்கை

நாலாயிரத் திவ்யப் பிரபந்தமும் திருக்குறளும், பெரிய புராணமும் முதுமொழிமேல் வைப்பு நூல்களும், திருத்தொண்டர்புராணத்தில் திருக்குறள் என்னும் ஆய்வு நூல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் இருக்கையில் பணியாற்றியபோது இவர் இயற்றினார். இவை இன்னும் அச்சில் வரவில்லை.

திருக்குறள் மூலமும் பரிப்பொருள் உரையும் என்னும் நூலைப் பதிப்புக்காகச் செப்பனிட்டதும் இவ்விருக்கையில் பணிபுரிந்த காலத்திலேயே ஆகும். அந்நூல் வெளிவந்துள்ளது.

இவர், கடினமாக உழைத்து மறுப்புக்கு இடமற்ற ஆய்வுக் கருத்துகளையே வெளியிடும் இயல்புடையவர் என்பதைத் தமிழறிஞர்கள் நன்கறிவர். இத்தகு பெருமகனாரின் நூல்கள் பல்லாண்டுகளாக வெளியிடப் பெறாமலிருப்பது பல்வேறு ஐயங்களை ஏற்படுத்தும். அவர்தம் அரிய கருத்துக் கருவூலங்கள் அவர் பெயரிலேயே விரைந்து தமிழகத்திற்க வழங்குவது நனிநாகரிகம் ஆகும்.

## திருவருட்பாவில் பெரும் பொருட்குவியல்

திருவருட்பாவின் விண்ணப்பக் கலிவெண்பாவை நுண்ணாய்வு செய்து, 1990ஆம் ஆண்டு வெளியிட்டார். மூன்றாம் திருமுறை நுண்ணாய்வும் அதே ஆண்டு வெளிவந்தது. திருவடிப் புகழ்ச்சி நுண்ணாய்வும் 1991ஆம் ஆண்டு வெளியிட்டார். இம்மூன்று நுண்ணாய்வு நூல்களும் சாத்திரச் செய்திகளும் ஞானநூற் செய்திகளும் செறிந்தவை. விளக்கம் பெறாத பல சொற்களுக்குரிய விளக்கங்களை அறியத் தருபவை.

## கடல் கடந்த தமிழர்களுக்கு சைவத் தமிழ்நூல்கள்

தென்னாப்பிரிக்கத் தமிழர்களுக்கான சைவத் தமிழ் நூல்கள் பலவற்றை இவர் வெளியிட்டார். ஞானசம்பந்தர் தேவாரத்திரட்டு,

திருநாவுக்கரசர் தேவாரத் திரட்டு, சுந்தரர் தேவாரத்திரட்டு, சிவனருள் திரட்டு, நீத்தார் விண்ணப்பம், நால்வர் வழிபாடும் திருமுறைப் பாடல்களும், திருவருட்பாத்திரட்டு ஆகிய நூல்கள் இவ்வகையுள் அடங்கும்.

இந்நூல்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் அருளாளர்களின் வரலாறுகளை எழுதியுள்ளார். பக்திப் பனுவல்களைக் கொடுத்து அவற்றுக்கெதிர் பக்கங்களில் அவற்றின் ஒலிபெயர்ப்பையும் தந்துள்ளார்.

இந்த நூல்கள் நெட்டால் தமிழ் வைதிக சபையின் வெளியீடுகளாக வந்தன.

தமிழ் பேசத்தெரியும்; ஆனால் படிக்கத் தெரியாது என்ற நிலையில் உள்ளவர்களுக்கு எளிய முறையில் தமிழ் என்ற ஒரு நூல் செய்தார்.

## திருக்குறள் பணிகள்

திருக்குறள் உரைக்கொத்து என முப்பாலுக்கும் கிடைத்த பழைய உரைகளின் தொகுப்பு வெளியிட்டார். ஐவரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் தக்கவற்றைத் தெரிவு செய்து திருக்குறளை ஒட்டி வெளியிட்டார். திருக்குறள் உரையாசிரியர்களின் வரலாற்றாய்வும் செய்து வெளியிட்டார். இவை மூலப்பிரதிகளை ஒப்பிட்டு வந்த பதிப்புகள் ஆகும். 1972க்குப் பிறகு ஸ்ரீகாசி மடத்தாரால் வெளியிட்ட பதிப்புகளில் மொழிபெயர்ப்பு உள்ளிட்ட சில சிறப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

திருக்குறள் அறத்துப்பாலுக்குச் சற்றொப்பக் குறளளவுக்கே உள்ள சிற்றுரை எழுதி வெளியிட்டார்.

திருக்குறள் சைனர் உரைப்பதிப்பு தஞ்சை சரஸ்வதி மகால் வாயிலாக வெளிவந்தது. அதன் பதிப்பாசிரியராகிய இப்பெருமகனார் மூலச்சுவடிகளை ஒப்பிட்டு அரிய திருத்தங்கள் செய்து விரிவான ஆராய்ச்சி முன்னுரையும் எழுதிப் பதிப்பித்தார்.

## மராட்டியர் வரலாறு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கியதும் அதன் முதல் துணைவேந்தராகத் திருமலி. முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியன்

அவர்கள் பொறுப்பேற்றார். அவர்தம் அழைப்பின்பேரில் நினைவில் வாழும் தமிழறிஞர் கா.ம.வே. அவர்கள் முதல் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். சுவடிப்புலத் தலைவர் என்ற தகைமையும் இவருக்கு வழங்கப்பட்டது. அப்பணிக் காலத்தில் தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும் என்ற நூலையும் தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு என்ற நூலையும் எழுதினார்.

போன்ஸ்லே வம்ச சரித்திரம், மெக்கன்சி சுவடிகள், மோடி ஆவணங்கள் ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து இவ்விருபெரும் நூல்களை வெளியிட்டார்.

## ஆழ்நோக்காய்வு

திருவனந்தபுரத்தில் இயங்கிவரும் பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தின் வாயிலாகத் தொல்காப்பிய மூலம் - பாட வேறுபாடுகள் - ஆழ்நோக்காய்வு என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் கா. ம. வே.ச., வே. சு., ப. வே. ரா. ஆகியோரின் கூட்டுப் பதிப்பாக வெளிவந்தது. இதில் அறிஞர் கா. ம. வே. அவர்களின் பங்கை, ''பேரா கா. ம. வேங்கடராமையா, ச.வே. சு. தொகுத்த பல செய்திகளை முறைப்படுத்தியும், புதியன திரட்டியும், விரிவாக்கியும் பல நிறுவனங்களுக்குச் சென்று செய்தி சேகரித்தும் மூன்று அதிகாரங்களையும் செம்மைப்படுத்தினார்'' என அக்கழக இயக்குநர் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் குறித்துள்ளார்.

இப்பணி மட்டுமன்றித் 'தந்துரை' என்ற தலைப்பில் மிக விரிவான தொல்காப்பியப் பாட வேறுபாடுகள் ஆய்வுரையும் செய்து, கா.ம.வே. அவர்கள் வெளியிட்டுள்ளார்.

## நிறைவுப்பணிகள்

சைவ அடியார்கள் அறுபத்து மூவர் வரலாறுகளையும் ஆங்கிலம் அறிந்தவர்கள் - வெளி மாநிலத்தவர் - வெளி நாட்டினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக - மரபுநிலை மாறாமல் - எளியநடையில் சுருக்கமாக எழுதி வெளியிட்டார். அந்நூலின் பெயர் "THE STORY OF SAIVA SAINTS" என்பதாகும். நால்வர் வரலாற்றை (சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசர்) விரிவாக ஆங்கிலத்தில் எழுதித் தனி நூலாக வெளியிட்டார்.

திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் கழகத்தில் ஆய்வாளராகப் பணியேற்றுத் தமிழகக் கையேடு (THE HAND BOOK OF TAMILNADU) என்னும் விரிவான பெருநூலை எழுதினார். இது சுற்றுலாத்துறைச் செய்திகளடங்கிய நூலன்று; உலக ஆய்வறிஞர்களுக்குத் தமிழகத்தின் ஆய்வுக் களங்களை முழுமையாகச் சுட்டிக்காட்டும் நூலாகும். வரலாறறிந்த தொடக்கம் முதல் சென்ற நூற்றாண்டின் இறுதிவரை வரலாற்றுக் குறிப்புகள், நூல்கள், தலங்கள், சமய சமுதாய நிறுவனங்கள், கலை பண்பாடு ஆகிய அனைத்தும் இந்நூலுள் இனம் காட்டப்பெற்றுள்ளன.

தஞ்சையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டில் இந்நூல் வெளியிடப் பெற்றது. இப்பெருமகனாரின் மறைவுக்குப்பின் இந்நூல் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இனிய கவிதைகளும் இதழியல் படைப்புகளும்

நினைவில் வாழும் தமிழறிஞர் கா. ம. வேங்கடராமையா அவர்கள் மரபுக் கவிதைகள் எழுதுவதிலும் வல்லவராவார். ஸ்ரீ அருணந்தி அடிகள் போற்றித் திருவகவல், ஸ்ரீ காஞ்சி காமகோடி திருமரபுத்தொகை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் சுப்பையா பேரில் வண்ணக ஒத்தாழிசை முதலிய பல மரபுக் கவிதைப் படைப்புகள் செய்தார்.

பல்வேறு மலர்களிலும் கலைமகள் உள்ளிட்ட பல்வேறு இதழ்களிலும் பல கட்டுரைகள் எழுதினார்.

தெலுங்கு மொழியில் உள்ள கதைகளை மொழிபெயர்த்து இதழ்களில் வெளியிட்டார்.

குமரகுருபரர், ஸ்ரீ குமரகுருபரர் ஆகிய சமய இலக்கியத் திங்களிதழ்களின் ஆசிரியர் குழுவில் இருந்து அப்பதிப்புகள் சிறப்புற வெளிவரப் பெரும்பங்காற்றினார்.

தமிழகத்திலும் பல வெளி மாநிலங்களிலும் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றினார்.

இவர்தம் தமிழ்ப்பணிகளின் விரிவை முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி, முனைவர் சி. இலட்சுமணன் ஆகியோர் தொகுத்த 'சுவடிப் பதிப்பாசிரியர்கள்' என்ற நூலில் காணலாம்.

# 1. திருஞானசம்பந்தர்

சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும், சுந்தரரும் திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் பாடிச் சைவம் பரப்பியவராவர். இம் மூவரும் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தனர். சுந்தரர் தம் நாளிலும் தமக்குமுன்னும் இருந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையால் துதித்தார்.

அந்நாள் முதல் பெரியபுராணம் பாடப் பெற்றது வரையிலும் அதற்குப் பின்னும் செந்தமிழ்நாட்டுச் சான்றோர் அளவிலாத பெருமையுடைய அடியார்களை அமையம் வாய்ப்புழி எல்லாம் போற்றியுள்ளனர் என்று கல்லெழுத்துக்களால் அறிய வருகிறது.

திருஞானசம்பந்தரைப் பற்றிக் கல்வெட்டுக்களினின்று அறியப்படுவனவற்றுள் சில காண்போம்.

## திருஞானம் பெற்ற பிள்ளையார்

**"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்**
**தாதையார் முனிவுரத் தானெனை ஆண்டவன்"**

என்பது சம்பந்தர் வாக்கு.

அம்மையும் அப்பனும் இங்ஙனம் பாலமுதைச் சம்பந்தருக்கு அளித்து ஆட்கொண்டமையால் சம்பந்தர் ஆளுடைய பிள்ளையார் ஆயினார். சேக்கிழார் பெருமானும்,

**"யாவருக்கும் தந்தைதாய் எனும் இவர் இப் படியளித்தார்**
**ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய்........**
**...........சிவஞான சம்பந்தராயினார்"**

என்பார்.

இறைவியார் பாலமுது அளித்த செய்தியை நினைவு கூர்ந்து, கழுமலத்து ஆளுடைய பிள்ளையாருக்குத் திருப்பாற் போனகம் செய்தருளுவதற்காகத் திருமடைப்பள்ளிப் புறமாகத் தலைச்சங்காட்டைச் சேர்ந்த சிற்றூர் சோழ பாண்டிய நல்லூரில் 5 வேலி நிலம் அளிக்கப் பெற்றதாக ஒரு சாசனம் கூறுகிறது.[1]

முதற் குலோத்துங்க சோழன் காலத்திய, சிதம்பரத்தில் உள்ள வடமொழிக் கல்வெட்டுச் சுலோகங்களுள் ஒன்று,

''மலைமகளின் ஸ்தனத்தில் இருந்து பாலைப் பருகிக் கலைமகளின் அருளைப் பெற்று ஆனந்தக் கூத்தாடி ஸ்ரீ கண்டன் புகழைப் பாடிய ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தப் பெருமாளுடைய பொன் திருமேனியை நிறுவி அதற்குப் பாயசம் நிவேதிக்க (நரலோக வீரன்) ஏற்பாடு செய்தான்'' என்று கூறுகிறது.

**''யத்வாணீ கிரிஜா குசப் பிரகளிதம்**
**பித்வா ப்ரந்ருத்தம் பயோ**
**மாதுர்யாததிகாம் ததோ விகவித**
**ஸ்ரீ கண்ட கீர்த்திக் கிரமா**
**மூர்த்திம் தஸ்ய த்ருசாம் மஹோத்சவகரீம்**
**காந்யா குமாரஸ்ய தாம்**
**க்ருத்வா யாம்ச சாதகும்ப கழதம்**
**தஸ்யாதி சத் பாயசம்''[2]**

என்பது சாஸன வடமொழிப் பாடல்.

இங்ஙனம் சிவஞானம் பெற்றமையால் திருஞானசம்பந்தர் ''திருஞானம் பெற்ற பிள்ளையார்'' என்று பல சாசனங்களில் குறிக்கப் பெறுகிறார்.[3]

'அரும்பாக்கிழான் மணவில் கூத்தனான காலிங்கராயன்' என்ற ஓரரசியல் தலைவன் முதல் குலோத்துங்க சோழன் காலத்திறுதியிலும், விக்கிரமசோழன் காலத்து முதற்

பகுதியிலும் வாழ்ந்தவன். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் பல. அவை தில்லையில் 31 வடமொழிச் சுலோகங்களிலும்,[4] 36 தமிழ் வெண்பாக்களிலும்,[5] திருவதிகையில் 25 வெண்பாக்களிலும்[6] அமைந்துள்ளன.

இவன் தில்லையில் தேவாரம் ஓதுவதற்கும், இருந்து அன்பர்கள் செவிமடுத்து இன்புறுவதற்கும் ஆக ஒரு மண்டபத்தைச் செய்தான்.

**''நட்டப் பெருமானார் ஞானம குழைத்தளித்த**
**சிட்டப் பெருமான் திருப்பதியம் - முட்டாமைக்**
**கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான்தெவ் வேந்தர்கெட**
**வாட்போக்கும் தொண்டையர்கோன் மன்''**

என்பது அவ்வெண்பா. இதில், ''ஞானம் குழைத்து அளித்த சிட்டப் பெருமான்'' என்ற பகுதியில், சம்பந்தர்க்கு இறைவன் ஏவலால் சிவஞானப்பால் கொடுக்கப்பெற்ற செய்தி குறிக்கப்பெற்றது.

**தாளம் பெற்றமை**

ஈசன், ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்'' என்பர் சுந்தரர்.[7] சம்பந்தர், திருக்கோலக்காவில் தாளம் பெற்ற செய்தியை, நினைப்பூட்டும் நெறியில் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய குடுமியான் மலைக் கல்வெட்டில், 'தாளம் பெற்றான் குடிக்காடு'[8] என்று ஒரு நிலப் பகுதி குறிக்கப் பெற்றுள்ளது.

**ஆணை நமதே[9]**

திருஞானசம்பந்தரது முதலாவது தலயாத்திரை, திருக்கோலக்காவுக்குச் சென்றது. இரண்டாவது தலயாத்திரை, திருநனி பள்ளிக்குச் சென்றது. இது இவரது தாயாகிய

பகவதியாரின் பிறந்தவூராகும். அங்குக் ''காரைகள் கூகை முல்லை'' என்ற திருப்பதிகத்தில் இறுதிப் பாடலில், ''திருநனி பள்ளியை நினைப்பவருடைய வினைகள் கெடும் - ஆணை நமதே'' என்று பாடியுள்ளார்.

**''இடுபறை யொன்ற அத்தர் பிரான்மேல் இருந்து இன்**
**இசையால் உரைத்த பனுவல்**
**நடுவிருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க**
**வினை கெடுதல் ஆணை நமதே''-**

என்பது அப்பாடல்.

சம்பந்தர் திருவேதிகுடிக்குச் சென்று பாடிய பதிகத்தின் இறுதிப் பாடலிலேயும் இவ்வாணை குறிக்கப் பெற்றுள்ளது.

**''சிந்தை செய வல்லவர்கள் நல்லவர்கள்**
**என்ன நிகழ் வெய்தி இமையோர்**
**அந்த வுல கெய்தியர சாளும் அது**
**வேசரதம் ஆணை நமதே.''**

சம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டில் இருந்தபொழுது, சம்பந்தர் மதுரைக்கு வரவேண்டும் என்று அழைக்கப் பெற்றார். திருநாவுக்கரசர், ''கோள்கள் தீமை பயக்கும் நிலையில் உள்ளன, செல்லற்க'' என்றார். சம்பந்தர் கோளாறு திருப்பதிகம் பாடினார். அதன் ஈற்றுப் பாடல் வருமாறு:

**''தேனமர் பொழில் கொளாலை விளை செந்நெல் துன்னி**
**வளர்செம்பொன் எங்கும் நிகழ**
**நான் முகன் ஆதியாய பிரமா புரத்து**
**மறை ஞான ஞான முனிவன்**
**தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரைசெய்**

**ஆன சொன் மாலை ஓதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே.''**

சீர்காழித் திருப்பதியில் அவர் பாடிய பதிகங்களில் ''மடல் மலிகொன்றை'' எனும் திருப்பதிகத்தின் ''கானலங் கழனி'' என்னும் பாடலில் 'ஆணையும் நமதே' என்றுள்ளது.

இங்ஙனம், நான்கு இடங்களில் **ஆணை நமதே** என்று சம்பந்தர் பாடியுள்ளமையின், நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில், சம்பந்தரை **''ஆணை நமது என்ன வல்லான்''** என்று குறிப்பிட்டுள்ளார்.

**''முத்திப் பகவன் முதல்வன் திருவடியை**
**அத்திக்கும் பத்தர் எதிர் ஆணை நமது என்னவலான்''**

என்பன அவ்வரிகள்.

**ஆணை நமதென்ற பெருமாள்**

''ஆணைநமது'' என்றமையின் திருஞானசம்பந்தரை ''ஆணை நமதென்ற பெருமாள்'' என்றும் குறிப்பிட்டனர்.

''ஆணைநமது என்ற பெருமாள்'' என்ற பெயர் பிரான் மலைக் கல்வெட்டில் காணப்பெறுகின்றது. இத்தன்ம சாசனத்துள் கையெழுத்திட்டவருள் ஒருவர் ''ஆணை நமதென்ற பெருமாள்'' ஆவர்.[10]

திருமையம் வட்டம் விராச்சிலை (பில்வனேசுவரர்) கோயில் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 16-ஆம் ஆண்டுக்குரிய சாசனத்தில், ''பெரிய திருக்கூட்டத்துத் தவணை முதலியார் மாணிக்க வாசகர் ஆணை நமதென்ற பெருமாள் ஆன கோவில் வாசகப் பிச்சமுதலியார்'' என்று ஒருவர் குறிக்கப் பெறுகிறார்.[11]

நார்த்தா மலையில் உள்ள திருமலைக் கடம்பர் கோயில் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் ஒன்பதாம் ஆண்டுக்

கல்வெட்டில் கையொப்பம் இட்டவருள், ''குடியுடையான் ஆணை நமதென்ற பெருமாள்'' என்பவனும் ஒருவனாவன்.[12]

### திருப்பாசுரம்

**''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகமும் துயர் தீர்கவே''**

இது ஞானசம்பந்தர் புனல்வாதம் செய்தற்கு அருளப் பெற்ற பாடலாகும். கொள்ளிடக்கரையில் கோவிந்தப் புத்தூரில் ஒரு சிவாலயம் உள்ளது. அங்கு மூன்றாம் இராசேந்திர சோழனின் இரண்டாமாண்டுக்குரியஒரு கல்வெட்டின் தொடக்கத்தில் மேலே காட்டிய பாடல் சிலா சாசனமாக அமைந்துள்ளது.[13]

### வேந்தனும் ஓங்குக

மேலே காட்டிய திருப்பாசுரத்தில் ''வேந்தனும் ஓங்குக'' என்று பாடியமையால், கூன் பாண்டியனுடைய கூன் நிமிர்ந்து அவன் நெடுமாறன் ஆயினான். இதனைச் சேக்கிழார்,

**''எம்பிரான் சிவனே எல்லாப்**
**பொருளும் என்று எழுதும் ஏட்டில்**
**தம்பிரான் அருளால் வேந்தன்**
**தன்னை முன் ஓங்கப் பாட**
**அம்புய மலராள் மார்பன்**
**அநபாயன் என்னும் சீர்த்திச்**
**செம்பியன் செங்கோ லென்னத்**
**தென்னன் கூன் நிமர்ந்த தன்றே''**

என்பர்.[14]

பாண்டியனுடைய கூனை நிமிர்த்த இவ்வற்புதம் மணவில் கூத்தன் காலிங்கராயனின் தில்லையில் கண்ட வெண்பாச் சாசனங்களுள் பின் வருமாறு குறிக்கப் பெற்றுள்ளது.

**''தென்வேந்தர் கூன் நிமிர்த்த செந்தமிழர் தென்கோயில்**

**பொன்வேய்ந்து திக்கைப் புகழ் வேய்ந்தான் - ஒன்னார்க்குக்**

**குற்றம் பலகண்டோன் கோளிழைக்கும் வேற்கூத்தன்**

**சிற்றம் பலத்திலே சென்று''**[15]

இப்பாடலில், பாண்டியன் கூன் நிமிர்த்தமையும், ஞானசம்பந்தர் கோயில் பொன்வேயப் பெற்றமையும் கூறப் பெறுகிறது. இதனுள் 'செந்தமிழர்' என்றது சம்பந்தரை. சம்பந்தர் தன்னை, 'தமிழ் ஞானசம்பந்தர்' என்று குறிப்பிடுவதும் இதனை நினைவுறுத்தும்.

**பரசமய கோளரி**

சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளியபோது, ''பேர்பலவும் ஊதுமணிச் சின்னமெலாம் பரசமய கோளரி வந்தான் என்று பரிமாற'' என்பர் சேக்கிழார்.[15] பின்னர்ச் சம்பந்தர் போதிமங்கைக்கு அருகில் எழுந்தருளும்போது, ''பார் குலவும் தனிக்காளம் சின்னம் எல்லாம் பரசமய கோளரி வந்தான் என்று ஊதின' என்பர்.[15] இதனால் சம்பந்தர் பரசமய கோளரி எனப் பெற்றார் என அறியலாம்.

ஆச்சாள்புரம் (திருநல்லூர்ப் பெருமணத்து) கல்வெட்டில் ''பரசமய கோளரி நல்லூர்'' என்று ஒரூர் குறிக்கப் பெறுகிறது. ஆச்சாள் புரத்தில் ''பரசமய கோளரி மடம்'' என்று ஒரு மடம் இருந்ததாகவும் அறியப் பெறுகிறது.[16]

**திருஞானசம்பந்தன் குகை**

முனிவர் வாழும் இடங்கள் குகைகள். பிங்கலத்தை நிகண்டு, முனிவர் இருப்பிடம் எனக் கூறும். திருப்புத்தூர் வட்டம் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் மூன்றாம்

குலோத்துங்க சோழன் காலத்திலும்,[17] கும்பகோணம் வட்டம் முன்னியூர் திருவகத்தீஸ்வர முடையார் கோவிலின் தெற்கில் திருமடை விளாகத்தில் மூன்றாம் இராச ராசன் காலத்தில் 'திருஞானசம்பந்தன் குகை' இருந்தமையைக் கல்வெட்டுக் கூறும்.[18]

### திருமுறை தேவாரச் செல்வன் குகை

மூன்றாம் இராசேந்திரனின் நான்காம் ஆட்சி ஆண்டுக்குரிய (கி. பி. 1250) திருவிடைவாய்க் கல்வெட்டு, திருக்கழுமலத்தில் திருத்தோணிபுரமுடைய நாயனார் கோவிலில், ''திருமுறை தேவாரச் செல்வன் குகை'' என்ற குகை இருந்ததனைக் கூறுகிறது.[19] இக்குகை முன்னியூரில் உள்ள மூன்றாம் இராசராச சோழனது இருபத்தேழாவதின் எதிராமாண்டு (1244க்குரிய) கல்வெட்டிலும் குறிக்கப் பெறுகிறது.[20]

### காழிக் கற்பகக் குகை

மேற்படி முன்னியூர்க் கல்லெழுத்தில், ''காழிக் கற்பகம் குகை'' என்று ஒரு குகை பேசப் பெறுகிறது. இக்குகை திருமுறை தேவாரச் செல்வன் திருமடத்துத் தலைவரால் நிறுவப்பெற்றது. ''காழிக் கற்பகம்'' என்பது ஞானசம்பந்தரைக் குறிக்கும்.

> **''தண்புனல் விளைவயல் காழிக் கற்கபம்**
>
> **நண் புனர் அருமறை ஞான சம்பந்தன்''**

என்பது திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகப் பகுதி.

முதல் இராசராசனுடைய 27ஆம் ஆட்சியாண்டுக்குரிய அல்லூர்க் கல்லெழுத்தில், ''திருவெண்ணாவல் பூந்தோட்டத்தில் பெருந்திருவமிர்து செய்தருள வசக்கின நிலன் ஸ்ரீ யாழிக் கற்பகம் அரைமா'' என்ற பகுதியால் இத்தொடர் ஒரு நிலத்தின் பெயராக அமைந்தமை அறிய வருகிறது[21].

**சம்பந்தர் மனைவி**

மூன்றாம் இராசராசனின் 2ஆவது ஆண்டுக்குரிய ஆச்சாள்புரக் கல்வெட்டில் ஞானசம்பந்தர் திருமணம் செய்து கொண்ட அம்மையாரின் பெயர் காணப்பெறுகிறது.

''இந் நாயனார் கோயில் ஆளுடைய பிள்ளையாரும் சொக்கியாரும் காவேரிக்குத் தெற்கே வடக்கூர்களில் திரு வெண்காட்டிலும் திருநனிப்பள்ளியிலும் திருவாக்கூரினும் எழுந்தருளிப் பின்பு பெரும்பற்றப்புலியூரிலே எழுந்தருளுகிற இடத்து'' என்பது சாசனம். இதனால் ஞானசம்பந்தர் பெருமான் கைப்பற்றிய அம்மையார் பெயர் சொக்கியார் என அறிய வரும்[22].

விக்கிரம சோழனது (திருநல்லூர்ப் பெருமணத்து) ஆறாமாட்சியாண்டுக் கல்லெழுத்தில்,

''இக்கோயில் உடைய பிள்ளையார் திருக்கல்யாணம் பண்ணின திருமாளிகையும் திருவீதியும் திருநந்தவனமும் திருமடைவிளாகமும் நிலம் ஆறுமாவும்'' என்பது காணப் பெறுகிறது[23].

**பிரம்மபுரீசர்**

இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய திருவாரூர் வடமொழிக் கல்வெட்டில் திருஞானசம்பந்தர் பிரமபுரீசர் எனப் பெற்றார்[24].

''ஸ்ரீமத் பிரம்ஹபுரீச வாகாதிபதி: ஸ்வஸ்வாமிமித்ர'' என்ற பகுதியில் தேவார மூவரும் குறிக்கப் பெறுவர். பிரமபுரி என்பது சீகாழியைக் குறிக்கும். பிரமபுரீச்சர் என்பது காழியர்கோவான ஞானசம்பந்தரைக் குறிக்கும்.

ஸ்ரீகாழி நாடுடைய பிள்ளை ஞானசம்பந்தர் திருக்கேதிச்சுரத் திருப்பதிகத்தில் ''காழிநாடுளார்க் கிறைஞானசம்பந்தன்'' எனக் குறித்துக் கொள்கிறார். ''கன்னிநாடுடையான் கோயில் காழிநாடுடைய பிள்ளை'' ...பது சேக்கிழார் வாக்கு.

முதற் குலோத்துங்கனுடைய 49ஆம் ஆண்டுக்குரிய திருமாணிகுழிக் கல்வெட்டு, ''உதவி திருமாணிகுழி உடைய மகாதேவர் கோவில் திருமடை விளாகத்தில் 'ஸ்ரீகாழி நாடுடையான் திருமடம்' என்னும் மடம் இருந்தது'' என்று கூறும். இது ஸ்ரீகாழி நாடுடைய பிள்ளையார் திரு மடம் எனவும் கூறப்படுகிறது[25].

திருவோத்தூருடைய மஹாதேவர் தேவதானங்களுள் ஒன்றாக, ''ஸ்ரீகாழி நாடன் விளாகம்'' என்னும் பகுதி மூன்றாம் குலோத்துங்கனின் 33ஆம் ஆண்டுக் கல்வெட்டில் உள்ளது[26].

## பூம்பாவை வழிபாடு

சம்பந்தர், சித்தம் அன்புறு சிவநேசர்பால் திருவருள் கொண்டு, மயிலை கபாலீச்சர மதிற்புறத்தே பூம்பாவையின் எலும்பினை 'மட்டிட்ட புன்னையங்கானல்' எனும் பதியம் பாடிப் பெண்ணாக்கினர். இப்பூம்பாவை மயிலையில் வழிபடப் பட்டமையைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு உரிய எழுத்தமைதி கொண்ட விருபாக்ஷீஸ்வரர் கோவிலில் உள்ள பாண்டிய வேந்தன் கல்வெட்டொன்று[27] 'திருப்பூம்பாவை உடைய நாயனாரைக்' குறிக்கிறது. செயின்ட் தாமஸ் மவுண்ட் ஹோலி அப்பாஸ் கான்வெண்டில் உள்ள துண்டுக்கல்வெட்டு[28] ஒன்று, திருமயிலாப்பூரில் உள்ள பூம்பாவைக்குக் காசு, கடமை, நல்லாயம் முதலியற்றில் இருந்து விலக்களிக்கப் பெற்றதனைக் கூறுகிறது.

## கொத்தலர்குழலி

''கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமேலணிந்தென்
உளமே கவர்ந்த அதனால்

புத்தரொ டமணை வாதிலழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவற்கு மிகவே''

என்பது கோளறு பதிகத்தின் இறுதிப் பாடல். தில்லையில் உள்ள கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்லெழுத்துக்கள் மூன்றனுள் ''பிராமணி அம்பலத்தமுது கொத்தலர் குழலி''[29] என்று ஒருத்தி குறிக்கப் பெறுவள். இவள் 'பெரும் பற்றப் புலியூர்ப் பெரும் கவுசியன் திருக்காழிப் பாலையுடையான் இரவி' என்பவன் மனைவி ஆவள்.

**நாறுசாந்திளமுலை**

''தூறுசேர் சுடலையிற் சுடரெரி
யாடுவர் துளங்கொளிசேர்
நீறுசாந் தெனவுகந் தணிவர்வெண்
.பிறைபுல்கு சடை முடியார்
நாறுசாந் திளமுலை அரிவையோ
டொருபகல் அமர்ந்தபிரான்,
வீறுசேர் துருத்தியார் இரவிடத்
துறைவர் வேள் விக்குடியே''

என்பது ''ஒங்கிமேல் உழிதரும் ஒலிபுனல்'' என்னும் திருப்பதிகத்தின் இரண்டாம் பாடல், இப்பாடலடிப்படையாக, காமக் கோட்டமுடைய நாச்சியார் 'நாறு சாந்திள முலை நாச்சியார்' எனக் கல்வெட்டுக்களில் கூறப்படுகிறார்.[30] திருத்துருத்தியுடையார், 'வீங்குநீர்த்துருத்தியுடையார், சொன்ன வாறறிவார்' எனக் கல்வெட்டுப் பகுதி[31] ''பைம் பொழில் சூழ் வீங்குநீர்த்துருத்தியார் இரவிடத் துறைவர் வேள்விக்குடியே' என்னும் முதற்பாடற் பகுதியை நினைப்பூட்டுவது ஆகும்.

**பையர வல்குலாள்**

திருவிற்கோலம் என்பது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. இது கூவம் என்று இந்நாளில் வழங்குகிறது. இங்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் மூன்றாம் பாடல்,

**"ஐயன்நல் லதிசயன் அயன் விண் ணோர் தொழும்**
**மையணி கண்டனார் வண்ணம் வண்ணவான்**
**பையர வல்குலாள் பாகம் ஆகவும்**
**செய்யவன் உறைவிடம் திருவிற்கோலமே"**

என்பதாகும். இப்பாடலில் இறைவி, 'பையரவல்குலாள்' என்று குறிக்கப் பெறுகிறாள். திருக்கூவப் புராணத்தில் வாழ்த்துச் செய்யுளில்,

**"எழிலுடை பையரவல்குலம்மை பதம் வணக்கம் செய்வாம்"**

என்ற பாடற் பகுதியில் இத்தொடர் பயின்றுள்ளது. செந்நெல் வைத்த சருக்கத்தில்,

**"பொருவில் தன்னை விற்கோலத்தன் எனும்பெயர்புதுக்க**
**உருவம் முன் வளைத்து ஒரு கழைத் தண்டுமுன் ஊன்றித்**
**திருவிறைஞ்சு பொற் பையரவல்குலாள் சிரிப்பத்**
**தரும சீலர் தம் மனையிடைப் புகுந்தனன் தலைவன்"**

என்னும் பாடலிலும் இத்தொடர் பயின்றுள்ளமையைக் காணலாம்.

1912இல் 30ஆவது எண்ணாகப் படி எடுக்கப் பெற்ற கல்வெட்டில், பையரவல்குலம்மைக்கு வெள்ளிக்கிழமை வழிபாடற்ற விற்கோலம் ஊரவர் நிவந்தம் அளித்ததாகச் சொல்லப் பெற்றுள்ளது.

**தனி நின்று வென்றான்**

விக்கிரம சோழனின் ஐந்தாமாண்டுக் கல்வெட்டு திருவெண்காடுடையார் கோயில் சுற்றுத் தெருவில் "தனிநின்று

வென்றான் மடத்தில்'' திருவிழாச் சேவிக்க வந்த மாகேசுவரர்க்கு உணவூட்டுவதற்குக் கொடுக்கப் பெற்ற நிலக்கொடையைக் குறிக்கிறது[32]. தனினின்று வென்றான் என்பது ஞானசம்பந்தரைக் குறிப்பதாகலாம். ஒரு பக்கம் எண்ணாயிரம் சமணமுனிவரும் அவர்களை எதிர்த்துத் தனியாக நின்று சமணர்களை வென்றமையால் திருஞான சம்பந்தரைத் தனினின்று வென்றான் என்று கூறல் தகும்.

## இளவெண்மதி சூடினான்

திரு அறையணிநல்லூர் என்பதும் சம்பந்தர் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று; பெண்ணையாற்றின் கரையில் உள்ளது; இந்நாளில் அரகண்ட நல்லூர் என்று வழங்கப் பெறும் இத்தலப் பதிகப் பாடலுள் ஒன்று பின் வருமாறு:

**''பீடினால் பெரியோர்களும் பேதமை கெடத் தீதிலா**
**வீடினால் உயர்ந் தார்களும் வீடிலார் இள வெண்மதி**
**சூடினார் மறை பாடினார் சுடலை நீரணிந்து ஆரழல்**
**ஆடினார் அறை யணிநல்லூர் அங்கையால் தொழு வார்களே.''**

இப்பாடலில் இறைவன் ''இளவெண்மதி சூடினார்'' என்று குறிக்கப் பெறுகிறார். இப்பெயர் இவ்வூர்க் கல்லெழுத்தில் ஒருவனுக்குப் பெயராக வந்துள்ளது. அவ் வீர வரலாறு வருமாறு:

இவ்வூரில் நீண்ட காலமாக ஒரு மண்டபம் முற்றுப் பெறாமல் இருந்தது. ஒருவன் இம் மண்டப வேலை நிறைவுற்றால் என்னுயிரைப் பலியாகக் கொடுப்பேன் என்று பிரார்த்தனை செய்து கொண்டான். மண்டப வேலை முடிவுற்றது; அவன் தன்னுயிரைப் பலி கொடுத்தான். இவ் வீரச் செயலைப் பாராட்டி அவன் சந்ததியார்க்கு 1000 குழி நிலம் உதிரப்பட்டியாகக் கொடுக்கப் பெற்றது. உயிரை ஈந்தவன் பெயர் இள வெண்மதி சூடினான் என்பது அக் கல்வெட்டிற் கண்டது.''[33]

**எம்பிரான் சம்பந்தன்**

திருத்தொண்டத் தொகையில் சம்பந்தர்,

**''வம்பறா வரி வண்டு மணம் நாற மலரும்**
**எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''**

எனச் சுந்தரரால் பாராட்டப் படுவர். இதிற் கண்ட 'எம்பிரான் சம்பந்தன்' என்ற தொடர் திருமழுவாடியின் (திருமழபாடி) மகேஸ்வரர்களில் ஒருவர் பெயராக அமைந்துள்ளது அறிந்து மகிழ்தற்குரியது.[34]

**திருஞானசம்பந்த நல்லூர்**

திருஞானசம்பந்தர் பெயரால் சில ஊர்கள் இருந்தன. நாவல்பாக்கமான திருஞான சம்பந்தநல்லூரைத் திருவோத்தூர் ராஜநாராயணச் சம்புவராயர் கல்வெட்டுக்களும்,[35] தவசிகுழியான சம்பந்த நல்லூரைக் காளையார் கோவிலில் உள்ள சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்கள் இரண்டும் குறிப்பிடுகின்றன.[36]

'திருஞானசம்பந்த சதுர்வேதி மங்கலம்' என்பது திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசனின் 22ஆம் ஆண்டுக்குரிய மன்னார்குடிக் கைலாசநாதர் கல்வெட்டு ஒன்றுள் கண்டது.[37] 'போகிஸ்வரமுடையார் கோயில் திருஞான சம்பந்தன் தளத்தில் இருந்தது' என்பது சடையவர்மன் விக்கிரபாண்டியனின் நான்காம் ஆண்டுக்குரிய தேவிப்பட்டணக் கல்வெட்டு[38] ஒன்றால் அறியப்பெறும்.

**திருஞானசம்பந்தன் நாழி**

திருவலிதாயத்தில் உள்ள சோழ அரசன் ஒருவனின் பதினாறாம் ஆண்டுக் கல்வெட்டில், ''திருஞான சம்பந்தன் நாழி'' என்னும் பெயருடைய அளவைக் கலன் குறிக்கப் பெறுகிறது.[39]

### ஆளுடையபிள்ளை வழிபாடு

மாசி வைகாசித் திருவிழாக்களின்போது ஆளுடைய பிள்ளையார் திருமேனி திருவடதுறையில் இருந்து திருமாறன் பாடிக்கு எழுந்தருளும். இவ்வாறு எழுந்தருளுங்கால் இவருக்கு அமுது செய்தருளவும், பட்டைப் பொதிசோறு வழங்கவும் சேக்கிழான் பாலறாவாயன் ஆயின களப்பாள ராசன் மூன்றாம் இராசராசனின் 19ஆம் ஆண்டில் நிவந்தம் தந்தான்.[40]

### திருவிடை வாய்த் திருப்பதிகம்[51]

''பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிகம் முன்னூற்று எண்பத்து நான்கு'' என்பது திருமுறை கண்ட புராணம். ஆனால் அச்சிட்ட நூல்களில் காணப்பெறுபவை 383. ஆனால் திருவிடைவாய் என்னும் ஊரில் சாசனமாக இருந்த சம்பந்தர் பதிகம் 1918இல் படி எடுக்கப்பட்டுள்ளது. இது, ''மறியார் கரத்தெந்தை'' எனத் தொடங்குவது. பதினொரு பாடல்களை உடையது.

### திருஞானம் ஓதுதல்

திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுவரம் என்ற தலத்திலுள்ள சிவாலயத் திருமதில்களில், திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியனது 3ஆம் ஆட்சியாண்டில் அமைந்த சாசனம்[42] ஒன்றில், ''திருஞானம் விண்ணப்பம் செய்வதற்குச் சிவப்பிராமணர் எண்மர் கோளகிமடத்து ஞானாமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப் பெருமாள் என்பாருடன் உடன்படிக்கையின் பேரில் நிலம் விற்றனர்'' என்று வரையப்பெற்றுள்ளது. இதனால் சிவப்பிராமணர் திருஞானம் விண்ணப்பித்தனர் என்று அறியலாம்.

திருநெல்வேலித் திருக்கோயிலில் திருஞானம் ஓத விக்கிரமசோழதேவர் கண்ட தவசிகளில் பதினொருபேர்க்கும் அவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும்பேர்க்கும் பதினொரு மனைகள் யாண்டு 15ஆவது முதல் மடம் எடுத்திருக்கக்

காணியாகத் தரப்பெற்றன என்று ஒரு கல்வெட்டு விவரிக்கின்றது.[43] ''இனிப் போஜனம் உள்ளிட்டு வேண்டுவனவற்றுக்கு நிலம் ஒருவேலியும் எட்டுமா கோமாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியரது ஆட்சியாண்டு பதினைந்தாவது முதல் திருஞானப்புற இறையிலியாகத் தரப்பெற்றது'' என்று இன்னொரு சிலைமேல் எழுத்து செப்புகின்றது.[44]

திருச்செந்தூர் வட்டம் ஆற்றூர்க் கல்வெட்டில் திருஞானம் ஓதுவதற்குத் திரிபுவனச்சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் காலத்தில் நிவந்தம் கொடுக்கப்பெற்றது என்று படிக்கிறோம். இக்கல்வெட்டுக்குரிய அரசன் 1239இல் பட்டம்பெற்ற மாறவர்மன் சுந்தர பாண்டியன் II என்றும், விக்கிரம சோழதேவர் என்பார் கொங்குச் சோழர் என்றும் இச்சுந்தரபாண்டியர்க்கு மச்சுனனார் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.[45]

திருஞானம் என்பது தேவாரம் போலச் சமய குரவருள் ஒருவரால் அருளப் பெற்ற பக்தி நூலாக இருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர்[46]. எனினும் சம்பந்தராதிய மூவர்பாடிய தேவாரத்தையே திருஞானம் என்பது குறிக்கும் எனக் கொள்ளுதல் தகும். சீகாழிப் பகுதியில் இறைவியாரளித்த பாலடிசில் உண்டு,

**''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாக்கும் பாங்கினிலோங்கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்''**

என்று சேக்கிழார் பகர்வர். இதனால், ஞானசம்பந்தர் தேவாரத்தையே திருஞானம் என்று குறித்தனரோ என்று ஐயம் எழும்.

தலைஞாயி(று) என்னும் இடத்தில் உள்ள மூன்றாம் இராசேந்திரனுடைய 3ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும்[47] இவ்வரசனது 23ஆம் ஆட்சியாண்டுக்குரிய (கோவிலூர்) திருவுசாத்தானக் கல்வெட்டும்[48] சம்பந்தரைத் திருஞானம் பெற்ற பிள்ளையார் எனக் குறிப்பிடுகின்றமையின் இவ்வையம் பின்னும் மிகுகின்றது. ஆனால் சம்பந்தர் முதலிய மூவர் அருளிய தேவாரத்தைக் காழித் தாண்டவராயர் என்பார், தாம் எழுதிய திருவாசக வியாக்யானத்தில், 'திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தேவாரம்' என்றும், 'திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தமிழாகிய தேவாரம்' என்றும் கூறியுள்ளமையால் திருஞானம் என்பது மூவர் தேவாரத்தையே குறித்ததாகக் கொள்ளலாம்.

**பூழியர்கோன் வெப்பொழித்த**

**புகலியர்கோன் கழல் போற்றி!**

## அடிக்குறிப்புகள்

1. தருமபுரம் ஆதீனம், இரண்டாம் திருமுறை, வரலாற்றுப் பகுதி, பக்கம். எண்.65.
2. தென்னிந்தியக் கோயிற்சாசனங்கள். தொகுதி - 3. பகுதி - பக்க எண். 1320.
3. பின்னிணைப்புக் காண்க.
4. South Indian Temple INS Vol. III Part II Pages 1303 - 25.
5. A. R. No 120 of 1888; பெருந்தொகை. 1059 - 1094.
6. A. R. No 369 of 1921; பெருந்தொகை. 1095 - 1119.
7. சுந்தரர்தேவாரம்: திருக்கோலக்கா. 8.
8. புதுக்கோட்டைச் சாசனங்கள் 319.
9. இலக்கியக்கேணி - 48 - 56 பக்கங்களைக் காண்க.
10. 152 of 1903; S - I - I. Vol. Vii. No. 440.
11. புதுக்கோட்டைச் சாசனங்கள் - எண். 393.

12. புதுக்கோட்டைச் சாசனங்கள் - எண். 271.

13. 192 of 1929.

14. பெரியபுராணப் பாடல் 653.

15. பெரியபுராணப் பாடல் 904.

16. விக்கிரமசோழன் - 3ஆம் ஆண்டு. 534 of 1908.

17. 311 of 1928.

18. 609 of 1902.

19. 28 of 1914.

20. 608 of 1902. S-I-I. Viii 205.

21. S-I-I. Vol. Viii No. 681. 370 of 1903.

22. 527 of 1918.

23. மூன்றாம் திருமுறை (தருமையாதீனப்பதிப்பு) பக்கம், 89.

24. S.I.I. Vol. No. 485.

25. S.I.I. Vii No 985; 160 of 1902.

26. Vii No 103; 94 of 1900.

27. சென்னை மாநகர் கல்வெட்டுக்கள் (த. நா. தொ.)
வெளியீடு. 1967 - 120.

28. த. நா. 1967 - 1249 and 1967 - 61.

30. Viii-707, 708, 713. 391 - 2 of 1903 and 397 of 1903.

31. மூன்றாம் திருமுறை (தருமைப் பதிப்பு) பக்கம் 82.

32. 495 of 1907.

32A. S.I.I. Vol. No 986.

33. S.I.I. பாண்டியர். மாறவர்மன் சுந்தரபாண்டியன். Year 10.

34. எயில்பாக்கிழான் விக்கினவினாயகன் எம்பிரான் சம்பந்தன்.
குலோத்துங்கன் III ஆண்டு 34. S.I.I Vol. V. No 632; 74 of 1895

35. S.I.I. Vol. Vii No. 106 and 109.

36. S.I.I. Vol. Viii. No 166 and 172.

37. S.I.I. Vol. Vi. No 48

38. S.I.I. Vol. Viii. No. 403

39. 214 of 1910.

40. 221 of 1902.

41. 8 of 1918; 1918p 149; சமாஜப் பதிப்பு-பக். 625-6

42. 359 of 1916.

43. S.I.I. V. No. 420. 131 of 1894

44. S.I.I. V. No. 421; 132/1894

45. 463 of 1929 - 30 and page No. 77.

46. Page No. 77 of A. R. E. 1929 - 30

47. 149 of 1927.

48. 216 of 1908.

# 2. திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசரைப் பற்றிக் கல்வெட்டுக்களினின்று அறியப்படுவனற்றுள் சில காண்போம்.

**பெயர்:** திருநாவுக்கரையர் என்றும் வாகீசர் என்றும் இவர் குறிக்கப்படுகிறார். தஞ்சைப் பெரிய கோயில் கட்டப் பெற்றதும் முதல் ஸ்ரீ காரியம் ஆராய்கின்ற அலுவலனாகத் திகழ்ந்தவன் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான். இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்த பிரதிமங்களுள் ஒன்று திருநாவுக்கரையர் பிரதிமம்.[1]

தஞ்சைப் பெரிய கோயிலில் முதல் ராஜராஜனது 29ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1014ல்).

''உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வர முடையாருக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மர்''

என்று ஒரு கல்வெட்டில் உள்ளது.[2] இந்நாற்பத்தெண்மருள், 8 பேர் திருநாவுக்கரையர் பெயரைப் பூண்டிருந்தனர் என்பது அக்கல்வெட்டால் அறியப்பெறுவதுள் ஒன்று.

முதற்குலோத்துங்கன் காலத்திலும், அவன் மகன் விக்ரம சோழன் காலத்திலும் படைத்தலைவனாகத் திகழ்ந்தவன் **மணவில் கூத்தன் காலிங்கராயன்** எனப் பெறுவான். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் அளப்பில. இவன் திருவதிகையில் ஆற்றிய திருப்பணிகளைத் திருவதிகை வீரட்டானத்தில் சாசனம் செய்யப் பெற்றுள்ள 25 வெண்பாக்களால் அறியலாம். இவன் திருவதிகையில் திருநாவுக்கரசருக்குத் திருக்கோயில் கட்டினான்.

**"ஈசன் அதிகையில்வா கீசன் எழுந்தருள**
**மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான் - பூசல்**
**விளைவித்த வேணாடும் வெற்பனைத்தும் செந்தீ**
**வளைவித்தான் தொண்டையர் மன்"**

என்பது திருவதிகைச் சாசனக் கவியாகும். இவ்வூரில் 'வாகீசர் திருமடம்' இருந்தமையை, முதல் குலோத்துங்கனின் நாற்பத்து நான்காம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது[3]. இவற்றில் திருநாவுக்கரசர் வாகீசர் எனப் பெற்றமை காண்க.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தரை சீகாழியில் முதன்முதல் சந்தித்தபொழுது வணங்கத் திருஞானசம்பந்தர், அப்பரே என்றழைத்தருளியதாகப் பெரியபுராணம் பகரும்[4]. எம்மண்டலமும் கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு பதினெட்டாவதில் அளித்த பில்லமங்கலம் ஆகமசீலீசுவரர் கோயில் கல்வெட்டில்[5] கையெழுத்திட்ட மகேசுவரர்களில் ஒருவர் பெயர் அப்பர் என்று அறிய வருகிறது.

இரண்டாம் குலோத்துங்கனாகிய அநபாயன் சைவசமய குரவர் மூவரிடத்தும் மிக்க பற்றுடையவன். அவர் தம் படிவங்களைத் திருவாரூர் திருமூலட்டான முடையார் கோயிலில் எழுந்தருளுவித்தான். தனது ஏழாவது ஆட்சியாண்டில் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியாருக்கும் அர்ச்சனா போகமாக அநபாய நல்லூர் என்ற மருகல் நாட்டுத் திருவாதிரை மங்கலம் என்ற ஊரை அளித்தான். ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும் அர்ச்சனைகளுக்குமாகப் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் மருகல் நாட்டுக் கங்கை கொண்ட சோழ நல்லூரான சிவபாத சேகர நல்லூரை அளித்தான்[6].

இத்தமிழ்க் கல்வெட்டோடு தொடர்ந்த வடமொழிக் கல்வெட்டில் தேவார மூவர், ப்ரஹ்மபுரீச (சம்பந்தர்) வாகதிபதி (திருநாவுக்கரசர்) ஸ்வஸ்சாமி மித்ர (சுந்தரர்) என்று குறிக்கப் பெற்றுள்ளனர்.[7] இதனால் திருநாவுக்கரசர் வாகீசர், வாகதிபதி என்று வழங்கப்பெற்றார் என்றும் அறியப்பெறும்.

மேற்படி கல்வெட்டில் சுந்தரர் ஆளுடைய நம்பி என்றும், சம்பந்தர் ஆளுடைய பிள்ளை என்றும் கூறப்பெற்றதினின்று திருநாவுக்கரசர் ஆளுடைய அரசு என்று கூறப்பெற்றிருத்தல் கூடும் என்று ஊகித்து அறியலாம்.

தாராசுரத்து இராசராசேச்சுரத்து இறையகப் புறச் சுவரில் கண்ட சிற்பக் கீழ் கல்லெழுத்துக்களில் ''திருநாவுக்கரசாண்டார்'' கதை என்று எழுதப்பட்டுள்ளது. இறைவன் திருவடி சூட்டும் நிலையில் அச்சிற்பம் அமைந்துள்ளது. திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலில் உள்ள திருத்தொண்டத் தொகைச் சிற்பங்களில் திருநாவுக்கரசர் உழவாரப் படையுடன் இருத்தல் கவனத்திற்குரியது.

திருவீழிமிழலையில் திருநாவுக்கரசு தேவர் திருமடம் என்று ஒரு மடம் இருந்ததாக[8] ஒரு கல்லெழுத்து நுவல்கிறது. அதில் திருமடத்திற்குரிய நிலங்களின் பெயர் கூறப்பெற்றுள்ளது. இன்னொரு சாசனம்[9] மகேசுவரருக்கு உணவளித்தற் பொருட்டு மேற்படி திருமடத்திற்கு நிலமளித்த செய்தியைக் கூறுகிறது. பல ஊர்களிலும் திருநாவுக்கரசர் திருமடங்கள் இருந்தன.

### சொற்றுணை

திருநாவுக்கரசர் கல்லிற் பிணிக்கப் பெற்றுக் கடலிற் பாய்ச்சப்பெற்ற பொழுது பாடப்பெற்றது 'சொற்றுணை வேதியன்' என்ற (நமசிவாய) திருப்பதிகம் ஆகும். ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி பன்மற்குயாண்டு 41ஆவது... திருவாமாத்தூருடைய மகாதேவற்கு......தேவன் சொற்றுணை அகமுடையான் செட்டங்கை வைத்த திருநொந்தா விளக்கு'' என்ற திருவாமத்தூர்க் கல்வெட்டிலும்,[10] ''விக்கிரமசோழ தேவற்கு யாண்டு மூன்றாவது வாகூருடையான் சொற்றுணை கங்கை சடைக் கரந்தானிடை நாங்கள் கொண்ட காசாவது'' என்ற திருச்செந்துறைக் கல்வெட்டிலும்[11] சொற்றுணை என்பது மக்கட் பெயராய் அமைந்திருத்தலைக் காணலாம்.

**கங்கை சடைக் கரந்தான்**

மேற்கண்ட திருச்செந்துறைக் கல்வெட்டில் கண்ட, வாகூருடையான் சொற்றுணை என்பானுக்குக் கங்கை சடைக் கரந்தான் என்றும் பெயரிருத்தலைக் காணலாம். மேற்படி திருச்செந்துறைக் கல்வெட்டின் இறுதியில் பிற்கண்ட வெண்பா உள்ளது:

**உண்ணலாம் நொய்யொடுசோ றோவாதே எப்பொழுதும்**
**பண்ணெலாம் பாடி இருக்கலாம் - மண்ணெலாம்**
**அகன்மாட நீடூர்கூர் கங்கை சடைக்கரந்தான்**
**பொன்மாடத் தெப்பொழுதும் புக்கு.**

கங்கை சடைக்கரந்தான் என்ற பெயர் திருநாவுக்கரசருடைய ''வங்கம விகடல்'' என்ற தேவாரத்து,

**''கங்கை சடையுட் கரந்தாய் அக் கள்ளத்தை மெள்ள உமை**
**நங்கை அறியிற் பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே''**

என்ற பகுதியை நினைவூட்டும்.

**''கங்கைவார் சடைக்காரந்தார்க் கன்பராகில்**
**அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே''**

என்பதும் அப்பர் தேவாரம்.

**நற்றுணை**

**''சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ**
**கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே''**

என்பர் அப்பர். இப்பாடலைப்போலப் பின்வருவதும் உள்ளது.

**முற்றுணை ஆயினானை மூவர்க்கும் முதல்வன் தன்னை**
**சொற்றுணை ஆயினானைச் சோதியை ஆத ரித்து**
**உற்றுணர்ந் துருகி ஊறி உள்கசி வுடைய வர்க்கு**
**நற்றுணை யாவர் போலும் நனிபள்ளி அடிக ளாரே''**

இது அப்பர் திருநனி பள்ளியில் பாடியது. திருநனிபள்ளி இறைவன் பெயர், ''நற்றுணையப்பர்'' என்பது இவ்வூர்க் கல்வெட்டொன்றில், 'நற்றுணையாண்டார் நந்தவனம்' என்று ஒரு நந்தவனம் காணப்பெறுகிறது.[12]

### *சிலந்தியைச் சோழனாக்கினான்*

பண்டொருகால் ஒரு சிலந்தி திருவானைக்கா எம்பெருமாற்குக் கூடுகட்டி வழிபட்டு வந்தது. அப்பெருமானை ஒரு யானையும் வழிபட்டு வரலாயிற்று. சிலந்தி கட்டும் கூட்டை அநுசிதம் என்று கருதிய யானை அக்கூட்டை அழிக்கலாயிற்று. யானை தன் கூட்டினை அழித்ததனைப் பொறாத சிலந்தி யானையின் துதிக்கையிற் புக, யானை உயிர் நீத்தது. சிலந்தியின் உயிரும் பிரிந்தது. எனினும் சிலந்தி மறு பிறவியில் அரசானயிற்று. அவ்வரசனே கோச்செங்கட் சோழன். இங்ஙனம், சிலந்தி சோனானமையைத் திருநாவுக்கரசர்,

**''சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து**
**உவந்தவண் இறந்த போதே கோச்செங்க ணானு மாக**
**கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்**
**குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே''**

என்று திருக்குறுக்கை வீரட்டானத்துப் பதிகத்துப் பாடியுள்ளார். சிலந்தியைச் சோழனாக்கிய அருட்செயலை வியந்து போற்றினர், அந்நாட் பெருமக்கள். இறைவனைச் ''சிலந்தியைச் சோழனாக்கினான்'' என்று வாயார வாழ்த்தினர். திருவானைக்காவல் ஒரு தோப்புக்குச் ''சிலந்தியைச் சோழனாக்கினான்'' திருத்தோப்பு என்றும் பெயரிட்டனர். இது,

''தேர்போல்'' என்று தொடங்கும் குலசேகரபாண்டியனது திருவானைக்காக கல்வெட்டில் காணப்பெறுவது. அத்தோப்பு ஒரு நிலத்துக்கு எல்லை கூறுங்கால் கூறப்பெற்றது. அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு:

''இவர்க்கு விற்றுக்குடுத்த நிலமாவது உள்ளூர் திருப்புடை விளாகத்துச் சிலந்தியைச் சோழனாக்கினான் திருத்தோப்புக்கு நீர் பாய்கின்ற வாய்க்காலுக்கு மேற்கு.''[13]

**நல்லநாமம் உடையான்**

மேற்படி கல்வெட்டில் கையெழுத்து இட்டவர்களில் ஒருவர், **''நல்லநாமம் உடையான்''** என்ற பெயருடையவர். நல்ல நாமமுடையான் என்பது சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானுடைய திருநாமங்களில் ஒன்று திருவைந்தெழுத்தாகும்; ''திருநாமம் அஞ்செழுத்தும செப்பாராகில்'', ''எந்தையார் திருநாமம் நமச்சிவாய'' என்ற அப்பர் வாக்கே இதனை வலியுறுத்தும். இத்திருப்பெயரையே ''நல்ல நாமம்'' என்று அப்பர் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்:

**''கல்லி னோடேனைப் பூட்டி யமண்கையர்**
**ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினால்**
**நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்**
**நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே.''**

**நஞ்சமுது செய்தான்**

திருநாவுக்கரசர்க்குச் சமணர்கள் நஞ்சு கலந்த பாற் சோறூட்டினர். நஞ்சும் அமுதாயிற்று நாதனடியாராகிய திருநாவுக்கரசருக்கு.

**''துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே**
**அஞ்செழுத் தோதினாளும் அரனடிக் கன்ப தாகும்**
**வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த**
**நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி அடிக ளாரே''**

என்பது இதற்கு அகச்சான்று. இச்செய்தியை நினைப்பிப்பது போல், ஒருவர் பெயர் '**நஞ்சமுது செய்தான்**' என்பதாகும் என்று சிதம்பரத்தில் உள்ள குலசேகர தேவர் கல்வெட்டு[14] ஒன்று கூறுகிறது. அவரது முழுப் பெயர் 'பெரும்பற்றப் புலியூர் மூலப் பருஷையாரில் வாச்சியன் திருவலஞ்சுழியுடையான் நஞ்சமுது செய்தான்' என்பதாம்.

**தோன்றாத்துணை**

கல்லையே தெப்பமாகக்கொண்டு கரையேறிய திருநாவுக்கரசர் திருப்பாதிரிப் புலியூரில் பாடுங்கால் இறைவன் தனக்குத் தோன்றாத் துணையாய் இருந்தமையைப் பின்வருமாறு கூறியுள்ளார்:

**''ஈன்றாளு மாயெனக் கெந்தை மாயுடன் தோன்றினராய்**
**மூன்றா யுலகம் படைத்துகந்தா னென்மனத் துள்ளிருக்க**
**ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பாதிரி புலியூர்**
**தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே''**

இவ்வரிய செயலை நினைவு கூரும் வகையில் இந்நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் திருப்பாதிரிப் புலியூரிறைவனைத் ''தோன்றாத் துணையாண்டார்'' என்று கூறினர். கோயிலைத் ''தோன்றாத் துணையாண்டார் கோயில்'' என்றும் கூறலாயினர். இதனைப் பின்வரும் கல்வெட்டுத் தொடர்களால் அறியலாகும்.

'விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ஏழாவது ராஜராஜ வளநாட்டு பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப் புலியூர்த் **தோன்றாத் துணையாண்டார் கோயில்**[15],

'விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஆறவது ராஜராஜ வளநாட்டுப் பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப்புலி யூரான பர நிருபதுராக்கிரமச் சதுர்வேதி மங்கலத்துத் **தோன்றாத் துணை ஆளுடையார் கோயில்**'[16],

'வீரமே துணையாகவும்' என்று தொடங்கும் வீர ராசேந்திர சோழனது 5ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டினின்று

திருப்பாதிரிப் புலியூர்க் கோயிலில் இருந்த சிவப்பிராஹ்மணன் ஒருவன் பெயர், 'தோன்றாத்துணை பட்டன்'[17] என்பது அறிய வருகிறது. இதனால் தோன்றாத்துணை என்பது மக்கட் பெயராயமைந்ததும் அறியலாயிற்று.

## தேனாருங் கொன்றையன்

மூன்றாம் இராசராச சோழனது பதினாறாவதின் எதிராமாண்டுக் கல்வெட்டொன்று,[18] திருவானைக்காவில் உள்ளது. இக்கல்வெட்டில் கையெழுத்திட்டவருள் ஒருவர் தேநாரும் கொன்றையன் என்ற பெயருடையவர் ஆவர். இப்பெயர் திருநாவுக்கரசர் திருவானைக்காவில் அருளிய திருத்தாண்டகத்தில் காணப்படுகிறது:

**ஊனாகி உயிராகி அதனுள் நின்ற**
**உணர்வாகும் பிறவனைத்தும் நீயாய்நின்றாய்**
**நானேதும் அறியாமே என்னுள் வந்து**
**நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்**
**தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்**
**திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்**
**ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்**
**அல்லகண்டம் கொண்டடியேன் என்செய்கேனே.**

## தருணேந்து சேகரன்

**"சங்கரன் காண் சக்கரம்மாற் கருள்செய் தோன்காண்**
**தருணேந்து சேகரன்காண் தலைவன் தாள்காண"**

என்பது திருவாரூர்த் திருத்தாண்டகப் பகுதி. இளம்பிறை சூடிய இறைவனைத் தருணேந்து சேகரன் என அப்பர் கூறிய இத்தொடர் மக்கட் பெயராக அமைந்துள்ளது. திருக்கழுக் குன்றத்தில் உள்ள சடையவர்மன் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டியனின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருக்கழுக்குன்றமுடைய

நாயனார் கோயிற் பூசகர் ''தருணேந்து சேகர பட்டர்'' என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார்.[19]

**என்னானைக் கன்று**

போசள மன்னன் வீரராமனது திருவானைக்கா சாசனத்தில்[20] திருவானைக்காவுடைய நாய்னாரைப் பூசிக்கும் திருவெள்ளறைக் காச்சயபன் **என்னானைக் கன்று பட்டன்** என்று ஒருவன் குறிக்கப்பெறுகிறான். திருநாவுக்கரசர் திருவானைக்காவில் பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனை ''என்னானைக் கன்று'' என்று குறிப்பிட்டார். இதுவே திருவெள்ளறைக் காச்யபனுக்குரிய பெயராயிற்று. அத்திருத்தாண்டகம் பின் வருமாறு:

**முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை**
**மூவாத சிந்தையே மனமே வாக்கே**
**தன்னானை யாப்பண்ணி ஏற்றி னானைச்**
**சார்தற் கரியானை தாதை தன்னை**
**என்னானைக் கன்றினைஎன் ஈசன் தன்னை**
**எறிநீர்த் திரையுகளும் காவி ரிசூழ்**
**தென்னானைக் காவானை தேனைப் பாலை**
**செழுநீர்த் திரளைச்சென் றாடினேனே.**

**செம்பொற் சோதி**

**''திருவையா றகலாத செம்பொற் சோதி''**

என்பது திருநாவுக்கரசர் தேவார அடி. முதலாம் இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலில் நியமித்த நாற்பத்தெண்மர் பிடாரர்களில் ஒருவர் பெயர் ''திருவெணாவல் செம் பொற் சோதியான தக்ஷிணமேரு விடங்கப் பிச்சனான ஞான சிவன்'' என்பதாகும். 'பூமாதுபுணர' என்ற விக்கிரம சோழரது திரு நெய்த்தானக் கல்வெட்டில்[21] **''செம் பொற் சோதி உய்ய வந்தான்''** என்பது ஒருவர் பெயராகக் காணப்படுகிறது.

**காக்கு நாயகன்**

**"மூக்கு வாய் செவி கண்ணுடல் ஆகிவந்து**
**ஆக்கு மைவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்**
**நோக்கு வானமை நோய்வினை வாராமே**
**காக்கு நாயகன் கச்சியே கம்பனே"**

என்பது திருநாவுக்கரசர் திருக்கச்சி ஏகம்பத்தில் பாடிய திருக்குறுந்தொகையாகும்.

திருப்பாலைத்துறை ஆதிகேசுவரர் கோயிற்கருகில் ஒரு திருமடம் இருந்தது. அதற்குப் பெயர் "காக்கு நாயகன் திருமடம்"[22] என்பதாகும் என்று ஒரு கல்வெட்டு நுவல்கிறது. இது திருக்கச்சியேகம்பத்துத் திருக்குறுந் தொகைச் சொற்றொடரின் அடிப்படையில் அமைந்ததேயாகும். தென் ஆர்க்காடு மாவட்டம் பெருமுக்கில் என்ற ஊரில் முக்யாசலே சுவரர் கோயிலைக் கட்டியவன் கனகராயன் என்ற சிறப்புப் பெயருடையவன். அவருக்குக் காக்குநாயகன் என்பது இயற்பெயர்.[23]

மதுராந்தகம் வட்டம் பெண்ணகரத்தில் உள்ள வீர பாண்டியனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டில்,

**"ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துப் பெருசு நகர நாட்டுப் பெருநகர் பிரமீசுவரமுடைய நாயனார் கோயிலில்,**

**இவ்வூர் இருப்பைப் பாக்கிழான் தாழிகாக்குநாயகன் ஏறி யருளப் பண்ணின முதலியார் காக்கு நாயகர்க்கு காக்கு நாயகன் விசையன் செம்பிய தரையன் வைத்த திருவிளக்கு ஆறு"**

என்று காணப் பெறுகிறது[24]. இதில் மூவர் காக்கு நாயகன் என்ற பெயருடையவராகக் காணப்படுகின்றனர். இம்மூவரும் உறவினராதலும் கூடும்.

**கருவுணாயகர்**

'நெற்குன்றக் கிழார் களப்பாள ராயர்' என்பவர் முதல் குலோத்துங்கன் காலத்திலும், விக்கிரம சோழன் காலத்தில் சில ஆண்டுகளும் வாழ்ந்தவர்; திருப்புகலூரில் உள்ள முதற் குலோத்துங்க சோழனது 49ஆவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டொன்று,

''ஸ்ரீ புகலூர்த் தேவர் மத்தியான்னம் அமுது செய்து அருளும்போது... நித்தம் பன்னிரண்டு பிராமணர் உண்பதாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டத்துப் பேரூர் நாட்டு நெற்குன்றத்து நெற்குன்றக் கிழார் **அரையன் கருவுணாயகரான** களப்பாளராஜர் செய்வித்த சாலைக்கு... சாலைப் புறமாக இறையிலி செய்து'' என்றுள்ளது.[25] இப்பகுதியிலிருந்து இவர் நெற்குன்றம் என்னும் ஊரினர்; வேளாண் மரபினர்; அரையன் என்னும் சிறப்புப் பெயருடையவர். கருவுணாயகர் என்பது இவருடைய இயற்பெயர். திருநாவுக்கரசர் கச்சியேகம்பத் திருக்குறுந் தொகையில் இறைவனைக் ''கருவுணாயகன்'' எனக் குறிப்பர்.

**''திருவின் நாயகன் செம்மலர் மேலயன்**
**வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்**
**ஒருவ னாயுணர் வாயுணர் வல்லதோர்**
**கருவு ணாயகன் கச்சியே கம்பனே''**

**எடுத்த பொற்பாதம்**

**''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.''**

இது திருநாவுக்கரசரின் திருவிருத்தம் என்பது யாவரும் அறிந்ததே. சிதம்பரத்தில் உள்ள பல்லவன் கோப்பெருஞ் சிங்கனுடைய முப்பத்தாறாம் ஆண்டுக் கல்வெட்டில், ''**இவை**

அருளால் ஊர்க் கணக்கு எடுத்த பொற்பாதப் பிரியன் எழுத்து'' என்றுள்ளது.[26]

**நாடற்கரியதோர் கூத்து**

**ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்**
**பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரம்கொள் கருவி**
**நாடற்கரியதொர் கூத்தும் நன்குயர் வீரட்டஞ் சூழ்ந்து**
**ஓடும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்**
**அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை**

என்பது திருநாவுக்கரசரின் திருவதிகைக் காந்தாரப் பண்பாடலாகும். இதில் கண்ட நாடற்கரியதோர் கூத்தினை ஆடியவன் இறைவனே யாவன். அவ்விறைவனை நாடற்கரிய கூத்தன் எனலாம். இப்பெயர் மாறவர்மனான திரிவுனச் சக்கரவர்த்திகள் விக்கிரம பாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வந்துள்ளது.

திருவதிகைத் திருக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் ''முதலியார் நாடற்கரிய கூத்தரும் நாயகரும் எழுந்தருளுங்கால் முற்பாடு திரை எடுத்தால் பதியிலார் ஆடவும் பிற்பாடு திரை எடுத்தால் தேவரடியார் ஆடவும் கடவதாதல் வேண்டும்'' என்பது கல்வெட்டுச் செய்தி.[27]

**திறக்கப் பாடுவார்**

திருநாவுக்கரசர் திருமறைக் காட்டில் ''பண்ணினேர் மொழியாள்'' என்ற பதிகம் பாடி மறைக் கதவினைத் திறந்தருளினார். திருவாய் மூர்க்குத் தொடரச் சொல்லுங்கால்,

**''திருக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்**
**உறைப்புப்பாடி அடைப்பித்தார் உந்நின்றார்''**

என்ற திருக்குறுந்தொகையில் திருநாவுக்கரசர் தம்மைத் ''திறக்கப் பாடியவர்'' என்று குறித்துக் கொண்டார்.

திருவொற்றியூரில் ஒரு கல்வெட்டில் இத்தொடா காணப் பெறுகிறது. இராஜநாராயணச் சம்புவராயர் தம் 7ஆம் ஆட்சியாண்டில் சில நிலங்களையும் மனைகளையும் திருவொற்றியூர்க் கோயிலுக்குக் கொடுத்தார்[6]. படம் பக்க நாயக விளாகம் என்பது, 'திறக்கப்படுவார்' மனைக்குக் கிழக்கில் உள்ளது' என்று அக்கல்லெழுத்துக் கூறுகிறது[28].

புதுக்கோட்டை - குளத்தூர்த் தாலூகா - தென்னங்குடி - தருமபுரீசுவரர் கோயிலில் உள்ள வீரசுந்தர பாண்டிய தேவரது கல்வெட்டில் திருவாசல் 'திறந்தான் காலாலே திருவாசலிலே அளப்போமாகவும்' என்றுள்ளது[29]. திருவாசல் திறந்தான் என்பது இங்கு ஒரு மரக்காலுக்குப் பெயராகக் காணப்படுகிறது. இச்சொற்றொடரும் ''கலைகொள் வேதவனப்பதி தன்னிலே கதவு தானும் கடுகத்'' திறந்த அப்பரது அற்புதத்தைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

**தவப்பெருந்தேவு செய்தார்**

**''குவப்பெருந் தடக்கை வேடன்**
**கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்**
**துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கித்**
**தூயவாய்க் கலசம் ஆட்ட**
**உவப் பெருங் குருதி சோர**
**ஒருகணை இடந்தங் கப்ப**
**தவப் பெருந் தேவு செய்தார்**
**சாய்க்காடு மேவினாரே''**

என்பது திருச்சாய்க் காட்டில் திருநாவுக்கரசர் பாடிய திருநேரிசை. இதில் கண்ணப்பரை இறைவன் ஆண்டு கொண்டருளிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இப்பாடலிற் கண்ட 'தவப் பெருந்தேவு செய்தார்' என்பது சகராண்டு 1342க்குரிய திருக்காளத்திக் கல்வெட்டில்[30] ஒருவர் பெயராகக் காணப்பெறுகிறது. திருக்காளத்தித் திருமணிக்

கெங்கையுடைய நாயனார் கோயிலில் திருமணிக்கங்கைசீயன் என்ற அதிகாரி அவ்வூரில் உள்ள சில நிலங்களின் உரிமைகளை மாற்றியமைக்கிறார். அச்சாசனத்தில் பலரும் கையொப்பமிடுகிறார்கள். அவர்களுள் ஒருவர் திருக்காளத்தியாண்டார் தவப்பெருந்தேவு செய்தார் என்பராவார்.

இதே நாளில் இன்னொரு அறக்கட்டளை பிறப்பிக்கப் பெறுகின்றது.[31] திருக்களாத்தித் திருமணிக் கெங்கையுடைய நாயனார் கோயிலின் வடக்குத் திருவீதித் தெற்கடையப் பாதியில் தவப்பெருந்தேவு செய்தார்க்குரிய நிலம் திருநாமத்துக் காணியாகக் கொடுக்கப்பெற்றது.

**குளிச்செழுந்த நாயனார்**

திருநாவுக்கரசர் கயிலையில் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றவர். அது கூடாமையின், ஆங்கொரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் ஒரு குளத்தில் எழுந்தார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள் பின் வரும் பாடலில் கூறியுள்ளார்:

**"ஆதி தேவர்தம் திருவருட் பெருமையார் அறியாதார்**
**போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி**
**மாதொர் பாகனார் மகிழும் ஐயாற்றில் ஓர் வாவி**
**மீது தோன்றிவந் தெழுந்தனர் உலகெலாம் வியப்ப."**

திருப்புகலூரில் ஒரு கல்வெட்டில்[32] குளிச்செழுந்த நாயனார் என்று காணப்பெறுகிறது. இது மேலே கூறியவாறு திருநாவுக்கரசரைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

**திருநாவுக்கரசு நாழி**

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 16ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் 'திருநாவுக்கரசு நாழி' என்னும் அளவையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது[33].

**வட்டணை காட்ட வந்த நாயகர்**

**பட்டுடுத்தப் பவளம்போல் மேனியெல்லாம்**

பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ
இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்
கெவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி
வேறொரு பதிபுகப் போவார் போல
வட்டணைகள் பலநடந்து மாயம் பேசி
வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே

என்பர் நாவுக்கரசர். வலம்புரத்தில் இரண்டாம் ராஜாதிராஜன் காலத்தில் வட்டணைக் காட்ட வந்த நாயகர் என்னும் திருமேனி எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளது.[34]

**திருநாவுக்கரசர் திருவீதி**

திருவதிகையில் பிடாரி கோயிலின் வட பக்கத்தில் காடுகெடுக்கப் பெற்றுப் புதிய தெரு ஒன்று உருவாக்கப் பெற்றது. இத்தெருவுக்குத் திருநாவுக்கரசர் திருவீதி எனப் பெயர் சூட்டப் பெற்றது.[35]

**திருநாவுக்கரசு குகை**

குகை என்பது முனிவர் இருப்பிடம். தேவார மூவர் பெயரால் தமிழ் நாடெங்கும் பல குகைகள் இருந்தமையைக் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன.

திருக்குறுக்கையில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனுடைய 29-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1201)க்குரிய கல்வெட்டு திருநாவுக்கரசு குகை என்ற ஒரு குகையைப் பற்றிக் கூறுகிறது. இக்குகை கட்டுவதற்கும் இக்குகைக்கு வரும் அபூர்விகளுக்கும் திருவைகாசித் திருநாளுக்கு வரும் மகேசுவரர்களுக்கும் உணவு அளிக்கவும் நெல் தானம் செய்யப் பெற்றது. திருத்தாண்டகம் ஓதுவது குறித்தும் இக்கல்லெழுத்து அறிவிக்கிறது[36].

**திருநாவுக்கரசர் திருவிழா**

வடவார்க்காடு மாவட்டம் தீர்த்த நகரி (திருத்தினை நகர்)யில் உள்ள மாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரப்பாண்டியனுடைய ஒன்பதாவதாட்சியாண்டுக்குரிய முடிவு பெறாத கல்வெட்டால் திருநாவுக்கரசருக்கு விழா எடுத்தமை உணரப் பெறுகிறது[37].

**ஆழிமிசைக் கன்மிதப்பில்**

**அணைந்த பிரான் அடிபோற்றி**

## அடிக்குறிப்புகள்

1. S. I. I. Vol. II, Part. II, No.38.
2. S. I. I. Vol. II, Part. III, No.65.
3. புதுக்கோட்டைச் சாசனங்கள், எண், 397.
4. பெரிய புராணம், திருஞான சம்பந்தர் புராணம்.
5. புதுக்கோட்டைச் சாசனங்கள், எண்.367.
6. S. I. I. Vol.Vii. No. 485; 269 of 1901.
7. S. I. I. Vol. iv. No. 397.
8. 402 of 1908.
9. 573 of 1908.
10. S. I. I. Vol.Viii, No. 734; 418 of 1903.
11. S. I. I. Vol.Viii, No. 606; 297 of 1903.
12. இரண்டாம் திருமுறை, திருத்தருமை யாதீனப் பதிப்பு, வரலாற்றுப் பகுதி, பக்கம் எண். 105.
13. S. I. I. Vol. iv, 25 of 1895.
14. S. I. I. Vol. iv, 229; 124 of 1888.

15. S. I. I. Vol.Viii, No. 746 122 of 1902.
16. S. I. I. Vol.Viii, No. 741 117 of 1902.
17. S. I. I. Vol.Viii, No. 133 of 1902.
18. S. I. I. Vol. IV No. 424; 230 of 1891.
19. S. I. I. Vol.V No. 481; 187 of 1894.
20. S. I. I. Vol.iv No. 427; 260 of 1891.
21. S. I. I. Vol.V No.587; 30 of 1895.
22. Ins. No. 582 of 1908.
23. Ins. No. 40 of 1905.
24. S. I. I. Vol. vi. No. 330.
25. சாசனத் தமிழ்க் கவி சரிதம். பக்கம். 64.
26. S. I. I. Vol. No.Viii. Ins. No. 43. 455 of 1902.
27. நான்காம் திருமுறை (தருமை யாதீனப் பதிப்பு) பக். 68.
28. 203 of 1912. S. I. T. I. Vol. I. No. 523.
29. புதுக்கோட்டைச் சாசனங்கள் எண். 469.
30. 198 Of 1903.
31. 199 of 1903.
32. 86 of 1927 - 8.
33. S. I. I. Vol. Viii. No. 440.
34. பூம்புகார் - கல்வெட்டுத்துறை வெளியீடு - பக்கம் 50.
35. நான்காம் திருமுறை (திருத்தருமைப் பதிப்பு) பக்கம் 64.
36. 219 of 191.
37. 121 of 1904.

# 3. சுந்தரமூர்த்திகள்

சுந்தரரைக் குறித்துக் கல்லெழுத்துக்களினின்றும் நம்மால் அறியப் பெறுவனவற்றைக் காண்போம்.

**ஆலால சுந்தரர்**

ஆலால சுந்தரர் என்பது சுந்தரர் திருக்கயிலையில் இருந்த பொழுது கொண்ட திருப்பெயர்[1] ஆகும். இது திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஒரு விளாகத்துக்குப் பெயராமைந்திருந்தது.

''ராஜநாராயணச் சம்புவரயற்கு யாண்டு ஏழாவது... சிவத் துரோகிகளை ஆராய்ந்து... இவர்கள் மனையும் காணியுமாய்ச் சண்டேசுவரப் பெருவிலையாக விற்று அம்மனைகள் நீக்கிநின்ற மனைகளும் காணியுமாய்க் கல்வெட்டினவிடத்தில்... நங்காம்புலமான ஆலால சுந்தர விளாகம் மூன்றில் ஒன்று...''[2]

அன்றியும் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்தில் வீராபிஷேகம் செய்தருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரின் 17ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1233ல்) திருநெல்வேலியில் ஆலால சுந்தரர் திருமடம் என்று ஒருமடம் குறிக்கப் பெற்றுள்ளது[3].

முதற் குலோத்துங்க சோழனின் 49ஆவது ஆட்சி யாண்டுக்குரிய காளத்திக் கல்வெட்டில்[4] ஆலால சுந்தரன் நந்தவனம் என்று ஒரு நந்தவனம் குறிப்பிடப் பெறுகிறது.

ஆச்சாள்புரத்திற்கு அருகில், ஆலால சுந்தர நல்லூர் என்று ஒரூர் இருந்தமை கல்வெட்டொன்றால் அறிய வருகிறது[5].

மூன்றாம் இராசராசனின் ஆறாவதின் எதிராமாண்டுக் கல்வெட்டு, ''பூண்டி என்னும் ஊரினராகிய புகலிவேந்தர் என்பார் தங்குவதற்கு ஆலால சுந்தரன் குகை'' என்னும் குகை

கட்டுதற்கு நன்கொடை வசூலித்தமையையும் குறிக்கிறது[6]. 'புகலிவேந்தர்' என்பது சம்பந்தர் பெயரை நினைவூட்டும். புகலி - சீகாழி. எனவே ஆலால சுந்தரர் என்ற பெயர் போற்றப்பட்டமை தெளிவு.

**இசை ஞானியார்**

இவர் சுந்தரரின் தாய். இவ்வம்மையாரின் பெயரை இரண்டாம் குலோத்துங்க சோழருடைய (1113 - 1150) திருவாரூர் வடமொழிக் கல்வெட்டினின்றறியலாம். "ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்" என்ற அப்பகுதி தமிழ் எழுத்துக்களில் உள்ளன.

**ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்**
**ஜனனீ பவதோ ஞான சிவாசார்யகுலே பவத்**
**சைவே கௌதம கோத்ரேஸ்மின் ஞான்யாரவ்யாகமலாபுரீ**

என்ற இக்கல்லெழுத்தில்[7] சுந்தரர் ஆளுடைய நம்பி என்று குறிக்கப் பெறுதலும், அவர் தாயார் இசைஞானியார் என்பதும், அவ்வம்மையார் ஞானசிவாசாரியார் என்பவருடைய மகள் என்பதும், சைவ கௌதம கோத்திரத்தில் அவ்வம்மையார் பிறந்தார் என்பதும் அறிதற்பாலனவாம்.

**நம்பியாரூரர்**

ஆளுடைய நம்பி என்றமைபோல, நம்பி ஆரூரர் என்றும் சுந்தரர் குறிக்கப் பெறுகிறார். இதனை வீரபாண்டிய தேவரது திருநெல்வேலிக் கல்லெழுத்தினின்றும்[8], இராசராசனது தஞ்சை இராசராசேச்வரத்துக் கல்லெழுத்துகளினின்றும்[9] அறிகிறோம். முதலாம் இராசேந்திரனின் 20ஆம் ஆட்சியாண்டுக் உரிய திருமழபாடிக் கல்வெட்டு நம்பியாரூரனார் படிமத்தைத் திருப்பள்ளித் தாமப்பிச்சன் எழுந்தருளுவித்து நிலமளித்ததாகக் கூறுகிறது[10].

முதல் இராசராசனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூகூர்க் கோயிலில் சித்திரைத் திருவிழா நடத்த

நிபந்தம் அளித்ததை அறிவிக்கிறது.[11] இராசராசன் திருப்பதியம் ஓத நியமித்த 48 பிடாரர்களில் இருவர்க்கு ஆரூரர் என்ற பெயரும் மேலும் இருவர்க்கு நம்பியாரூரர் என்ற பெயரும் அமைந்திருந்தமை அறிகிறோம்.[12]

## தடுத்தாட்கொண்டருளிய நாயனார்

சுந்தரர்க்குத் திருமணம் நிகழவிருக்கையில், சிவபெருமான் கயிலையில் அருளியவண்ணம் தடுத்தாட் கொள்வான் வேண்டிக் கிழவனாராக வந்து சுந்தரரை நோக்கித் தமக்கு அடிமை செய்ய வேண்டும் என்றார். இருவருக்கும் வாது நிகழ்ந்தது. திருவெண்ணெய்நல்லூரில் இவ்வழக்கு விசாரிக்கப் பெற்றது. கிழவனாரே வென்று பணிசெய்ய வேண்டும் என்றார்; இங்ஙனம் சிவபெருமான் தடுத்தாட் கொண்டமையின், '**தடுத்தாட்கொண்டருளிய நாயனார்**' என்றும், வழக்கில் வென்றமையின் '**விரைந்து வெல்லும் பெருமாள்**' என்றும் வழங்கப்பெற்றார்.

இவ்வழக்கு அரிய வழக்கு என்பதை நாமறிவோம். இவ்வரிய வழக்கினை வென்றமையின் சிவபெருமான் அரியவான வழக்கு வென்ற பெருமான் எனப்பெறுதல் பொருந்தும். இதனை நினைவுகூரும் வகையில் திருவெண்ணெய்நல்லூருக்கு அருகில் ஒரூர், '**அரியவான வழக்கு வென்ற பெருமாள்நல்லூர்**' எனப் பெற்றது. மேற்கூறியன யாவும் இராசராசச் சம்புவராயனது கல்லெழுத்து ஒன்றால் அறியலாம்.[13]

மூன்றாம் குலோத்துங்கனது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டும்,[14] ஏழாம் ஆண்டுக் கல்வெட்டும்[15] இறைவனை ''**ஆட்கொண்ட தேவர்**'' என்று சிறப்பிக்கின்றன.

இரண்டாம் குலோத்துங்கனுடைய திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டொன்றால்,[16] **தடுத்தாட்கொண்ட நல்லூர்** என்னும் ஊர்ப்பெயரும், ஆலால சுந்தரப் பெருந் தெரு என்னும் தெருவின் பெயரும் அறிய வருகிறது.

விசயநகர வேந்தர்கால அண்ணல் வாயில் கல்வெட்டில்[17] தடுத்தாட்கொண்ட நயினார் சிற்றம்பலவர் என்பவரும், பின்னங்குடிக் கல்வெட்டொன்றில்[18] நம்பி கருணாலையனான தடுத்தாட் கொண்டான் என்பவரும் குறிக்கப் பெற்றுள்ளனர். இவை சுந்தரர் வரலாற்றை நினைவிப்பனவாம்.

## வழக்கு வென்ற திருவம்பலம்

வெண்ணெய் நல்லூரில் விளங்கும் பேரவையில் இறைவன் பொருவரும் வழக்கில் வென்றார். திருவெண்ணெய் நல்லூரில் ''வழக்கு வென்ற திருவம்பலம்'' என்னும் மண்டபம் இருந்ததனைக் குலோத்துங்க சோழனின் இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டுக்குரிய திருவெண்ணெய்நல்லூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது[19].

## வழியடிமை கொண்டான்

இறைவன் வெண்ணெய்நல்லூர்ச் சபையில்,

**''அருமறை நாவல் ஆதி சைவன்**
**ஆரூரன் செய்கை**
**பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப்**
**பித்தனுக்கியானுமென்பால்**
**வருமுறை மரபுளோரும்**
**வழித்தொண்டு செய்தற்கோலை**
**இருமையால் எழுதி நேர்ந்தேன்**
**இதற்கிவை என்னெழுத்து''**

எனும் மூல ஓலை காட்டி வழக்குவென்று ஆட்கொண்டார்.

இறைவன் வழிவழி யடிமையாகக் கொண்டதனால் ''**வழியடிமை கொண்டான்**'' என்னும் திருநாமம் பெற்றார்.

கோப்பெருஞ் சிங்கனுடைய 19 ஆம் ஆண்டுக்குரிய தில்லைக் கல்வெட்டு ஒன்று, ''ஆளுடைய நாயனார்க்கு வழியடிமை கொண்டான் என்னும் பெயரால் விக்கிரம சிங்கபுரத்தில் திருத்தோப்பு'' செய்வித்தமையைக் குறிக்கிறது.[20]

### பழ ஆவணச்சொக்கன்

''வெண்ணெய்நல்லூரில் அற்புதப் பழ ஆவணம் காட்டி இறைவன் தன்னை ஆட்கொண்டான்'' என்பர் சுந்தரர்.

**''கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்**
**காம கோபனைக் கண்ணுத லானைச்**
**சொற்ப தப்பொருள் இருள் அறுத் தருளும்**
**தூய சோதியை வெண்ணெய்நல் லூரில்**
**அற்பு தப்பழ ஆவணம் காட்டி**
**அடிய னாஎனை ஆளாது கொண்ட**
**நற்ப தத்தைநள் ளாறனை அமுதை**
**நாயி னேன்மறந் தென்நினைக் கேனே''**

என்பது திருநாள்ளாற்றுத் திருப்பதிகப் பாடல்.

திருவெண்ணெய் நல்லூரில் உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 26ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றில் சிறுபுத்தூருடையான் பெருமாள் **'பழவாவணச் சொக்கன்'** என்பவன் வெள்ளித் தனிக் காளங்கள் தந்ததை கூறப்படுகிறது[21]. பழவாவணச் சொக்கன் என்ற தொடர் 'மூலவோலை மாட்சியிற் காட்டிய' இறைவனையே குறிப்பது.

### பித்தன் என்று பாடச் சொன்னான்

சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்; யாதினை அறிந்து என் சொல்லிப்பாடுகேன்' என்றார் சுந்தரர். முன்பெனைப் பித்தன் என்றமையின் பித்தன் என்றே பாடுக என்றார் பரமனார். இதனை நினைப்பிக்கிறது ஒரு கல்லெழுத்து.

உதயன் ஸ்ரீ கயிலாய முடையான் என்ற ஒருவர், ''பிச்சன் என்று பாடச் சொன்னான்'' என்று பெயரிட்ட காளங்களை வழங்கியதாகக் கோப்பெருஞ்சிங்கனது இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து[22] நுவல்கிறது.

**வன்றொண்டர்**

சுந்தரர் வன்மைகள் பேசிய பின் வன்றொண்டர் எனப் பெற்றார். இவ்வன்றொண்டப் பெயர் பூண்டவர் திருநெல்வேலி மாவட்டத்துக் கீழை மடஸ்தானத்து இருந்தனர் என்று கோநேரின்மை கொண்டானது கல்லெழுத்தினின்றும்[23], ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர் கல்லெழுத்தினின்றும்[24] அறிகிறோம்.

**தம்பிரான் தோழர்**

திருவாரூரில் உள்ள வடமொழிக் கல்வெட்டில் சுந்தரர் **ஸ்வஸ்வாமி மித்ர** எனக் குறிக்கப்பெறுவர். தம்பிரான் தோழர் என்ற தமிழ்ச் சொல்லின் நேர் வடமொழி ஆக்கப் பெயரே இது[25]. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திருக்கைச்சினம் (கச்சனம்) கல்வெட்டுச் 'சிறு கீழூரான முடிமான் தம்பிரான் **தோழச் சதுர்வேதி மங்கலம்**' என்று ஊரின் பெயரைக் கூறும்[26].

**நங்கை பரவையார்**

சுந்தரர் நங்கை பரவையாரைத் திருவாரூரில் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டவர். நங்கைபரவையாரது திருவுருவமும் நம்பியாரூரது திருவுருவமும் தஞ்சை இராஜராசேச்வரத்தில் எழுந்தருள்விக்கப் பெற்றன என்று ஒரு கல்லெழுத்துக் கூறுகிறது[27]. நங்கை பரவையார்க்குத் திருவையாற்றுக் கோயிலில் விளக்கு எரிக்க நிலம் விடப் பெற்றிருந்த செய்தியை **''நங்கை பரவையார் திருவிளக்குச் செய்''**[28] என்ற கல்லெழுத்துப் பகுதி அறிவிக்கிறது. இரண்டாம் குலோத்துங்கனுடைய 7ஆம் ஆட்சியாண்டுக்குரிய திருவாரூர்க் கல்வெட்டுத் திருவாரூர்க்கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற ஆளுடைய நம்பி பரவைநாச்சியார் படிவங்களுக்கு அநபாய நல்லூர் என்ற ஊர் அளிக்கப் பெற்றதாகக் கூறுகிறது[29].

முதல் இராசேந்திர சோழன்,[30] இராசாதிராசன்[31] காலக் கல்வெட்டுக்கள் சிலவற்றில், **''அணுக்கியார் பரவைநங்கை யார்''** என்பவள் குறிக்கப் பெறுகிறாள். பரவைநாச்சியாரின் பெயரைப் பூண்ட இவள் திருவாரூர்த் திருக்கோயிலில் பல திருப்பணிகள் ஆற்றினாள்.

முதல் ஆதித்த சோழன் காலத்தது எனக் கருதப்பெறும் வேதாரண்யக் கல்வெட்டொன்றில், **''திருவாரூர் நங்கை பரவை''** என்பவள் குறிக்கப் பெறுகிறாள்.[32]

முதல் இராசராசன் சோழமண்டலத்தின் பல தளிச் சேரிகளின்றும் கொண்டு வந்து தஞ்சைத் தளிச்சேரியில் பெண்டிரைக் குடியேற்றினான். திருவாரூரில் இருந்து தஞ்சைத் தளிச்சேரிக்கு மாற்றப்பெற்ற நாற்பத்து நால்வருள் பரவையின் பெயரைத் தாங்கியவள் ஒருத்தி யாவாள்[33].

### திருத்தொண்டத்தொகை[34]

''ஈசனடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழவெடுத்துத் தேசமுய்யத் திருத்தொண்டத் தொகை'' பாடினார் சுந்தரர். இப்பதிகம் பெரிய புராணத்துக்குப் பதிகமாக விளங்குவது. இது மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது என்று கல்லெழுத்துக்களினின்று அறிகிறோம்.

திருதொண்டத் தொகை நினைவாகத் திருவிடைவாயிலில், **''திருத்தொண்டத் தொகையான் குகை''** என்று ஒரு குகை இருந்தது என மூன்றாம் இராசேந்திர சோழனுடைய நான்காம் ஆட்சியாண்டுக் (கி. பி. 1250) குரிய கல்லெழுத்துக் கூறுகிறது. இக்குகையுள் திருமுறைகள் வைக்கப் பெற்றிருந்தன[35].

திருச்சி மாவட்டம் கோவந்தபுத்தூரில் உள்ள மூன்றாம் இராசேந்திரனது 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[36] கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை என்ற திருக்கோயிலின் திருமடைவிளாகத்தில், **''திருத்தொண்டத் தொகையான் திருமடம்''** இருந்தது என்று கூறுகிறது. இக்கல்வெட்டில்

சிதம்பரத்திலும் திருத்தொண்டத் தொகையான் திருமடம் இருந்தமை கூறப்பெற்றுள்ளது. குலசேகர பாண்டியனது 13ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலிருந்து திருத்தொண்டத் தொகையான் திருமடம் ஒன்று திருப்புத்தூரில் இருந்ததாகத் தெரிகிறது[37].

சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்தை அடுத்துத் **திருத்தொண்டத் தொகை ஈச்வரம்** என்றொரு திருக்கோயிலில் தொகை அடியார்கள் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடப் பெற்றனர் என அறிகிறோம். இவ்வாலயம் **நவலிங்கம் கோயில்** என இந்நாளில் வழங்குகிறது.

இக்கோயிலில் சுந்தரமூர்த்திசுவாமி[38] களின் திருவுருவமும் அமைக்கப் பெற்றிருந்தது எனக் கல்வெட்டுக்கள் புகல்கின்றன. மூன்றாம் குலோத்துங்க சோழனது இரண்டாம் ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டு இத்திருக் கோயிலைக் குறிக்கிறது[39].

சிதம்பரத்தில் உள்ள இராசேந்திர சோழனது 24ஆம் ஆட்சியாண்டுக்கல்லெழுத்தொன்று தில்லையில், ''திருமாசித் திருநாளில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பஞ் செய்வார்க்குக் காசு ஐஞ்சு''[40] நிவந்தம் அளித்ததாகப் பகர்கிறது.

**பொன்னார் மேனியன்** [41]

சுந்தரர் திருமழபாடியில் பாடியருளிய திருப்பதிகம், ''பொன்னார் மேனியன்'' என்னும் தொடக்க முடையது. பொன்னார் மேனியன் என்னும் தொடர் 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சேனாபதியின் மனத்தைக் கவர்ந்தது. அவர் **''சேனாபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன் அணிமுரி நாடாழ்வான்''** எனப் பெற்றார். அவர் திருமழ பாடிக் கோயிலில் செம்பு தராவால் பொன்னார் மேனியன் என்னும் **திருமேனியை** எழுந்தருள்வித்து, அதற்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தம் அளித்ததோடு சில அணிகலன்களையும் அளித்ததாக இரண்டாம் இராசேந்திரனுடைய கல்லெழுத்து உரைக்கிறது.[42]

இனி இச்தொடர் 'பொன்னார் மேனி பட்டர்' என்று ஒரு பட்டர் பெயரில் அமைந்ததாகச் சுந்தர பாண்டியனது கல்லெழுத்து[43] உரைக்கிறது. அன்றியும் மூன்றாம் குலோத்துங்கனது 34ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினின்று ஊரின் உட்பகுதி யொன்று "பொன்னார் மேனி விளாகம்" என்று பெயரிடப்பெற்றிருந்ததாக அறிகிறோம்.[44]

## கிழி பெற்றது

சுந்தரர் திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொற்கிழி பெற்றார். மூன்றாம் இராசரானது இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தில் 'கிழி கொடுத் தருளிய திருவாசல்' என்று ஒரு வாசல் குறிக்கப் பெறுகிறது.

## உளோம் போகீர்

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து, பின்னர்த் திருவாரூர்க்கு வரப் புறப்பட்டார். சூள் பொய்த் தமையின் இரு கண்களையும் இழந்தார். கண்ணிழந்து செல்பவர் திருவெண்பாக்கத்துக்கு வந்தார். சிவபெருமானை நோக்கிக் கண் வேண்டித் 'திருக்கோயிலில் உள்ளீரோ' என்று பாடினார். இறைவன் "உளோம் போகீர்" என்று கூறினார். இதனை நினைவு கூரும் நிலையில் திருவெண்பாக்கம் என்னும் திருத்தலத்திற்கு அண்மையில் "திருவுளம் பூதூர்" என்ற ஓரூர் "உளோம் போகீர் புரம்" என்று அழைக்கப் பெற்றது எனச் சொல்லப்படுகிறது.[45]

## நொந்தா ஒண் சுடர் விளாகம்

"நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளிஉறையும்
எந்தாய் உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே"

என்பது திருக்கச்சி மேற்றளித் திருப்பதிக முதற் பாடலாகும்.

சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய இத்திருப்பதிக முதற்குறிப்புச் சொற்றொடர் ஒரு வியாகத் தலத்திற்குப் பெயராய் அமைந்திருந்தது. இராச நாராயண மல்லிநாத சம்புவராயனின் கச்சித் திருமேற்றளிக் கல்வெட்டில், **''நொந்தா வொண் சுடர் விளாகம்''** என்பது குறிக்கப்படுகிறது[46].

**சேரமான் பெருமாள்**

சேரமான் பெருமாணாயனார் சுந்தரருடைய உற்ற நண்பர். ஆகவே சுந்தரரைச் சேரமான் தோழர் எனல் பொருந்தும். ஸ்ரீவிரபாண்டிய தேவரது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் கையொப்பம் இட்டவர் ஒருவர் ''சேரமான் தோழர்'' என்று இப் பெயரைப் பூண்டிருந்தார்[47]. இராஜநாராயணச் சம்புவராயரது காஞ்சிபுரத்துக் கல்வெட்டு[48] உடையார் ஏகாம்பர நாதர்க்குரிய திருத்தோப்புக்களில் ஒன்று, **''சேரமான் பெருமாள் திருத்தோப்பு''** என்ற பெயரால் அமைந்திருந்ததென அறிவிக்கிறது.

**அவிநாசியில்**

சுந்தரர் அவிநாசியில் நிகழ்த்திய அற்புதம் முதலையுண்ட பாலகனை அழைத்ததாகும். வீரபாண்டிய தேவரது அவிநாசியில் உள்ள பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[49] தென்பள்ளியிலிருந்த சுந்தர நாயனார்க்கு அமுது அளிப்பதற்காகப் பாப்பாரப் பூண்டியாகிய வீர ராசேந்திர நல்லூர் அளிக்கப் பெற்றதெனப் பகர்கின்றது. இக்கல்வெட்டில் கையொப்பமிட்டவருள் ஒருவர் ''தம்பிரான் தோழர்'' என்ற பெயருடையவர் என்று அறிகிறோம். தம்பிரான் தோழர் என்பது சுந்தரருடைய பெயர்களில் ஒன்று.

**''தம்பிரான் தோழர் மானக்கஞ்சாரர்''** என்று ஒருவரைக் குறித்துத் திருமுட்டம் கோயிலில் உள்ள அவரது படிமத்தின் கீழ் உள்ள கல்லெழுத்தினின்றறியப் பெறுகிறது[50].

இங்ஙனம் தம்பிரான் தோழர் என்ற சுந்தரத்திருப் பெயர் மக்கட் பெயராயமைந்து போற்றப்பெற்றமை அறிந்து இன்புறுவோமாக,

இனிச் சுந்தர பாண்டிய தேவரது இருபத்தொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று, திருப்புக்கொளியூர் குளக்கரையில் சுந்தரர் திருமேனி அரசனால் எழுந்தருளுவிக்கப் பெற்றது என்றும், அதற்குப் பாண்டி மண்டலத்து வியாபாரி அழகிய பாண்டிய தேவர் நிபந்தமாக 220 வராகன் புள்ளிக்குளிகை அளித்தார் என்றும் கூறுகிறது[51].

குளக்கரையில் சுந்தரர் திருமேனியை எழுந்தருளச் செய்தமை முதலையுண்ட பாலகனை அழைத்த அற்புதத்தை நினைவு கூர்தல் பொருட்டேயாம் என்பது ஊகித்தறிதற்பாலது.

**திருவடிப் போது நாறிய திருவீதி**

சிவபெருமான் சுந்தரர்க்காகப் பரவை நாச்சியாரிடத்து ஒருமுறைக் கிருமுறையாகத் தூது சென்றார்.

> **'படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்**
> **இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்**
> **தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்**
> **நடந்த செந்தா மரையடி நாறுமால்'**

எனத் திருநகரச் சிறப்பில் சேக்கிழார் பாடுவார். திருவாரூரில், திருவடிப் போது நாறிய திருவீதி, [52] என ஒரு திருவீதியின் பெயர் கல்வெட்டிற் காணப்பெறுவது இவ்வரலாறு காட்டுவது ஆகும்.

**திருத்தொண்டத்தொகைச் சொற்றொடர்கள்**

சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் திருஞான சம்பந்தரை, ''நற்கொன்றையான் அடியலால் பேணாஎம்பிரான் சம்பந்தன்'' எனப் போற்றினார். மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய 16ஆம் (கி.பி. 1222) ஆண்டுப் பின்னங்குடிக் கல்வெட்டில் சேரநாராயணபுரத்து வியாபாரி

நன்னெறிப்பூண்டியுடையான் பஞ்ச... ''எம்பிரான் சம்பந்தன்'' என்பவன் குறிக்கப்படுகிறான்.[53]

''பத்தராய் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்றார் சுந்தரர். திருவாய்மூராலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையாரை எழுந்தருளுவித்தவன் வில்லியுடையான் பத்தராய் பணிவார்.... என்பது கல்வெட்டில் கண்டது.

**ஆரம்பூண்டான்**

சோழ அரசன் காவிரியில் நீராடுங்கால் மணியாரம் நீரில் தவறி வீழ்ந்தது. அரசன், ''சிவபெருமானை இம்மணியாரத்தைக் கொண்டருளும்'' என்று வேண்டனார். உடனே அம்மணியாரம் திருமஞ்சனக் குடத்தில் புக்கது. திருவானைக்கா எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டிய பொழுது அந்த மணியாரம் சிவபெருமான் திருக்கழுத்தில் விழுந்து அணி செய்தது. இங்ஙனம் சிவபெருமான் திருவானைக்காவில் ஆரம் பூண்டவரானார். இது திருவானைக்காத்தலவரலாற்றுச் செய்திகளுள் ஒன்று. இதனை,

> **'பாரும் விண்ணும் கைதொழப் பாயும் கங்கைசடைமேல்**
> **ஆரம் நீரோ டேந்தினான் ஆனைக்காவு சேர்மினே''**

எனத் திருஞான சம்பந்தரும், சிறிது விரிவாக,

> **''தார மாகிய பொன்னித் தண்டுறைஆடி விழுத்தும்**
> **நீரில் நின்றடி போற்றி நின்மல கொள்என ஆங்கே**
> **ஆரம் கொண்டஎம் ஆனைக் காவுடை ஆதியை நாளும்**
> **ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே''**

எனச் சுந்தரரும் பாடியுள்ளளர்.

ஆரங்கொண்டமையால் இத்தலத்திறைவர் ஆரம் கொண்ட பெருமாள் எனும் பெயர் உற்றார். இத்தலக் கல்வெட்டுகளில் மூன்றில் **'ஆரம்பூண்டான்'** என்ற பெயருடையார் குறிக்கப்பட்டுள்ளனர்[54].

**ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம்**

இரண்டாம் இராசாதிராசன் தன் ஒன்பதாம் ஆட்சியாண்டில் திருவொற்றியூர்க் கோயிற்குச் சென்றிருந்தான். அப்பொழுது திருவொற்றியூர் இறைவற்குப் பங்குனி உத்திரப் பெருவிழா நடந்து கொண்டிருந்தது.

அத்திருவிழாவின் ஆறாம் திருநாளான புதன்கிழமையும் ஏகாதசியும் பெற்ற ஆயிலிய நாளில் படம் பக்க நாயக தேவர் திருமகிழின் கீழ் எழுந்தருள்விக்கப் பெற்றார். இராசாதிராச தேவனும் அப்பொழுது அக்காட்சியைக் காணச் சென்றனன்.

அங்கு அரசனோடு மடமுடைய சதுரானான பண்டிதன், மாகேசுவரக் கண்காணி திருவீதி வேயிடம் கொண்டான், ஸ்ரீ காரியம் அரிய பிரான்பட்டன், சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதன், காலும் பிடாரும் செயங்கொண்ட சோழ மண்டலப் பிடாரன், திருவொற்றியூர்ப் பிச்சன், கோயில் நாயகம் படம்பக்க நாயகபட்டன், கோயில் கணக்குத் திருவொற்றியூடையான் உறவாக்கினான் ஆகியோர் வந்திருந்தனர்.

இறைவன் திருமுன் ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் படிக்கப் பெற்றது; எல்லாரும் புராணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது அரசன் ''அமுதங் கிழவன் பெரியான் சோமன்'' என்பவனுக்கு வடுகப் பெரும் பாக்கத்துக் காணியுரிமையை அளிக்குமாறு உத்தரவிட்டான்.'' எனக் கி. பி. 1172 - 73க்குரிய திருவொற்றியூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது[55].

சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாகீச பண்டிதரே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தை விரிவுரை செய்தார் என்று கருதுபவரும் உண்டு;[56] அது பொருந்தாது. இவரும் பிறருடன் இருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தைக் கேட்டார் எனக் கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகிறது.

ஆளுடைய நம்பி என்பது சுந்தரரைக்குறிக்கும். சுந்தரர் வரலாற்றைக் கூறும் புராணம் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் எனப் பெற்றது போலும்.

சேக்கிழார் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம், கழறிற்றறிவார் புராணம், ஏயர்கோன் கலிக்காமர் புராணம் வெள்ளானைச் சருக்கம் என்ற நான்கு பகுதிகளில் சுந்தரர் வரலாற்றை மிக விரிவாகப் பாடியுள்ளார். ஆகவே பெரிய புராணத்தில் கண்ட இப்பகுதிகளையே 'ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம்' என்றனர் போலும்.

பெரிய புராண ஆராய்ச்சி என்னும் நூல்,[57] 'கேட்கவும் விளக்கவும் தக்கதாக இருப்பதனாலும், முன்வேறு நூல்கள் இல்லாமையாலும் பெரிய புராணத்துள் அடங்கிய சுந்தரர் புராணமே இந்த ஸ்ரீபுராணமாக இருத்தல் வேண்டும்' எனக் கூறுகிறது.

**மகிழடி சேவை**

சுந்தரர் புவியுள் சிவலோகம்போலத் திகழும் திருவொற்றியூரை அடைந்தார்; திருக்கயிலையிலிருந்து அநிந்திதையார் ஞாயிறு என்ற ஊரில் ஞாயிறு கிழாரின் திருமகளாக அவதரித்திருந்தார். சங்கிலியார் என்று திருநாமம் பெற்றார்.

சங்கிலியாருக்குத் திருமணப் பருவம் வந்தது. யாரையும் மணக்கவிரும்பாமல் கன்னிமாடத்தில் தங்கித் திருவெற்றியூர்ப் பெருமாற்குத் திருத்தொண்டு புரிந்திருந்தார்; திருவொற்றியூரை அடைந்த சுந்தரர் பூமண்டபத்தின் உள்ளே சங்கிலியாரைக் கண்டு அவரைக் குறித்து வினவினார். செய்தி அறிந்து சங்கிலியாரைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டினார். இறைவனும், ''சங்கிலியை உனக்குக் கொடுக்கின்றோம் கவலை ஒழி'' என்றருளினார்.

பின்னர், சிவபெருமான் சங்கிலியார் கனவில் தோன்றி, ''நம்பியாரூரன் உன்னை மணஞ்செய்ய விரும்பி என்னை

வேண்டியனான்'' என்றருளி, ''உன்னைப் பிரியாதவாறு சபதம் செய்து கொடுப்பான்'' என்றும் கூறினார்.

பின்னர்ச் சுந்தரரிடம் எழுந்தருளிச் சங்கிலியிடம் உன்னைப் பிரியேன் என்று சபதம் செய்து கொடுத்தல்வேண்டும் என்றார். சுந்தரர், பெருமானை நோக்கி ''இறைவனே சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வரும்போது தாங்கள் திருமகிழின் கீழ் எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டினார். சிவபெருமான் இசைந்தருளினார்; சங்கிலியாரிடம் சென்றார்.

''சங்கிலியே! மகிழின் கீழ்ச்சபதம் செய்து கொடுத்தால் போதுமானது; சந்நிதியில் வேண்டாம் என்று கூறுவாயாக'' எனக் கூறி மறைந்தருளினார்.

மறுநாள் சுந்தரர் சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வந்தார். சங்கிலியார் இறைவன் திருமுன் சபதம் செய்தல் தகாது; மகிழின் கீழ்ச் சபதம் செய்தால் போதும் என்றார். நம்பியாரூரர் திகைத்தார்; அங்ஙனமே திருமகிழ்க் கீழ்ச் சபதம் செய்து கொடுத்தார். மறுநாள் திருமணம் நிகழ்ந்தது.

இச்சுந்தரர் வரலாற்றை நினைவுகூர்ந்து திருவொற்றியூர்ப் பெருமானை திருமகிழ்க்கீழ் எழுந்தருள்வித்து விழாக்கொண்டாடுவது மகிழடி சேவை எனப்பெறும். இது ஒற்றியூரில் மட்டுமே கொண்டாடப்படுவது. இத்திருவிழா, பங்குனி உத்திரப் பெருவிழாவில் ஆறாம் திருநாளில் ஆயில்ய நட்சத்திரம் கூடிய நாளில் நடைபெற்றது என்று இக்கல்லெழுத்திலிருந்து அறியப் பெறுகிறது. தற்போது மாசி மகத்தை தீர்த்தவாரியாகக் கொண்ட பிரமோற்சவத்தில் ஒன்பதாம் நாளில் ஆயில்ய நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறுகிறது.

**தாராசுரத்துச் சிற்பங்கள்**

கும்பகோணத்துக்கு அண்மையில் உள்ள தாராசுரத்துக் கோயில் இரண்டாம் இராசராசனால் கட்டப் பெற்றது.

இக்கோயில் இறையகத்துச் சுற்றியுள்ள பகுதியில் நாயன்மார் சரிதங்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. அச்சிற்பங்களின் மேல் அவ்வச்சிற்பத்தை விளக்கும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. சுந்தரருடைய வரலாற்றைக் குறிக்கும் சொற்றொடர்கள் பின் வருமாறு:

1. உடையநம்பி எழுந்தருளுகிறார்.
2. ஆவணவோலை காட்டினபடி.
3. உடைய நம்பிக்கு ஓலை வென்றருளினபடி.[52]
4. ஏயர்கோன் கலிக்காமாண்டார்.
5. உடையநம்பி வேடர் வழிபறித்தபடி.
6. திருமுருகன் பூண்டியில் பெற்றபடி.
7. அவனாசியாண்டார் முதலைவாய்ப்பிள்ளை.
8. சேரமான் பெருமாள் கதை.

## தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் கருவறையை ஒட்டிய திருச்சுற்றின் உட்புறத்தில் பல வண்ண ஓவியங்களும் நாட்டிய கரணச்சிற்பங்களும் உள்ளன. இவை இராசராச சோழன் காலத்தவை. இவற்றுள் சுந்தரர் வரலாற்றோவியத்தை மேற்குப் புறத்தில் காணலாம். இவ்வோவியங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

தடுத்தாட் கொள்ளல்: முதல் ஓவியம் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பெற்ற காட்சி.

கிழவேதியர் கோலத்தில் சிவபெருமான் அமர்ந்த நிலை; ஒரு கையில் ஆவணவோலை; மறுகையை உயர்த்திச் சபையவரை நோக்கி வழக்குரைத்தல். எதிரில் சுந்தரர் நிற்கிறார்.

அடுத்து, கிழவேதியர். கையிலே ஆவண ஓலையுடன் எழுந்து நிற்க, 'அந்த ஓலையுள் உள்ளதென்ன' என்பதனை

அறியும் பேராவலுடன் அருகில் நிற்கிறார் சுந்தரர். நெஞ்சத்து உணர்வுகளைப் பிரதி பலிக்கும் முகம் உடையவராகச் சான்றோர் காணப்படுகின்றனர்.

வழக்கில் வென்றபின் அனைவரும் கோயிலுள் நுழைவதாக ஓவியத்தொடரின் இறுதிப்பகுதி அமைகிறது.

இவ்வோவியத்தின் கீழ்ப்புறம் மகளிர் சிலர் உணவு சமைப்பவராகக் காணப்பெறுகின்றது. அது சுந்தரரின் திருமண ஏற்பாட்டினைக் காட்டுவது ஆகலாம்.

**ஓலையில் எழுத்து:** ஓவியத்தில் காணும் ஆவண ஓலையில், ''இப்படி நானறிவேன்'' என்னும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன என்று ஆய்வாளர் அரிதிற் கண்டு கூறுவர்.[59] இப்பகுதி ஓலையின் முடிவுப் பகுதியாதல் வேண்டும்.

''இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என்னெழுத்து'' என ஓலையமைந்ததாகச் சேக்கிழார் கூறுவர்.

**கயிலை செல்லுதல் :** தடுத்தாட்கொண்ட காட்சி ஓவியத்தின் மேல், 'சுந்தரரும் சேரமான் பெருமாளும் கயிலை செல்லும் காட்சி' ஓவியமாக உள்ளது. நடுநாயகமாக வெள்ளானையின் மீது சுந்தரர் செல்கிறார்; வலப்புறம் சேரமான் பெருமாள் வெண்குதிரையின்மீது ஏறி முகில் மண்டலத்தில் பறக்கிறார்.

சேரமான் பெருமாள் குடுமியும் மீசையும் தாடியும் உடையவராகவும், நெருக்கமான கழுத்தணியும் ஓர் உருத்திராக்கமாலையும் உடையவராகவும், அரையில் மட்டுமே ஆடை உயைவராகவும் காட்சி தருகிறார். வெண்புரவியின் சேணம் கடிவாளம் முதலியன மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஓவியத்தின் வலப்புறம் காந்தருவர் இசைக் கருவிகளால் இன்னிசை ஒலிக்கத் தேவமாதர் நாட்டியமாடுகின்றனர். இடப்புறம் முனிவர் பலர் உள்ளனர்.

இவ் வோவியத்துக்கு மேலே உள்ளது கயிலைக் காட்சி. சிவபெருமான் புலித்தோலின் மேல் யோகாசன நிலையில் அமர்ந்திருக்கிறார்; நந்தி இவர்க்கு முன்னுள்ளது; பல முனிவர்கள், தேவ மகளிர் உருவங்கள் எதிரே உள்ளன. சிவபெருமான் உருவம் செந்நிறத்திலும் முனிவர் உருவங்கள் நீல நிறத்திலும் உள்ளன.

**வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி!**

இதுகாறும் கூறியவாற்றான் தேவார மூவர் வரலாறும் திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழும் தமிழ் மக்களால் போற்றப் பெற்றமை நன்கு விளங்கும். இவ்வண்ணமே இனியும் செந்தமிழ்ச் சான்றோர் யாவரும் மூவர் வரலாற்றைப் போற்றுவராகுக.

## அடிக்குறிப்புகள்

1. பெரிய புராணம்: வெள்ளானைச் சருக்கம், பாடல் எண்- 2.
2. S. I. I. Vol. I. Ins. No. 523; 203 of 1912
3. S. I. I. Vol. V. No. 422; 133 of 1894.
4. மூன்றாம் திருமுறை - தருமை ஆதீனப்பதிப்பு, பக்கம் 42.
5. மேற்படி பக்கம் 90.
6. 28 of 1914.
7. S. I. I. Vol. IV. No. 397; 73 of 1890.
8. S. I. I. Vol. V No. 418; 129 of 1894.
9. S. I. I. Vol. ii. Part II, No. 38.
10. 37 of 1920.
11. 229 of 1927.
12. S. I. I. Vol. II Part III, No. 65.

13. South Indian Temple INS. Vol. I, No.85.
14. 477 of 1921.
15. S. I. I. Vol. ii. No. 939. 310 of 1902.
16. ஏழாம் திருமுறை (திருத்தருமை யாதீனப் பதிப்பு) பக்கம் 36.
17. புதுக்கோட்டை சாசனங்கள், எண். 740.
18. புதுக்கோட்டை சாசனங்கள், எண். 1118.
19. ஏழாந்திருமுறை (தருமைப் பதிப்பு) பக்கம் 36
20. S. I. I. Vol. Xii. No. 209. 319/1913.
21. 466 of 1921; S. I. I. Vol. Xii No. 229.
22. 310 of 1902; S. I. I. Vol. Vii, No.639.
23. S. I. I. Vol. V. No. 420.
24. S. I. I. Vol. V. No.421.
25. S. I. I. Vol.iv. No. 397.
26. இரண்டாம் திருமுறை (தருமைப்பதிப்பு) பக்கம் 78.
27. என் அரசியல் தலைவர்கள் எனும் நூலின் 59, 73 பக்கம் காண்க.
28. S. I. I. Vol. V. No. 533.
29. S. I. I. Vol.Vii. No. 485. 269 of 1901.
30. 10 of 1918; 680 of 1919;
31. 679 of 1919; 320 of 1917. இப்பரவையின் பெயரால் பனையவரம் கோயில் இவன் காலம் முதல் பரவை ஈஸ்வரம் எனப் பெறலாயிற்று - Sri Thyagaraja Temple. Thiruvarur - by S. Ponnusamy. Par 34.
32. S. I. I. Vol. xiii. No. 24.
33. S. I. I. Vol. ii, No. 66.
34. என் இலக்கியக்கேணியில் பக். 24 - 36 காண்க.
35. 10 of 1918.
36. 192 of 1929.

37. 104 of 1908; 116 of 1908.

38. சிதம்பரம் - தருமபுர ஆதீன வெளியீடு, பக்கம் 44.

39. 262 of 1913.

40. S. I. I. Vol. iv. No. 223; 118 of 1888.

41. பொன்னார்மேனியன் - இலக்கியக்கேணி - பக், 31 -36.

42. S. I. I. Vol. V. No. 644.

43. S. I. I. Vol. V. No. 649 and also see No. 640, 643, 632, 658.

44. S. I. I. Vol. V. No. 632.

45. பெரியபுராண விரிவுரை, C.K. சுப்பிரமணிய முதலியார் - ஏயர்கோன் கலிக்காமர் புராணம், திருவெண்பாக்கம் தலக்குறிப்பு.

46. நான்காம் திருமுறை (தருமைப் பதிப்பு) வரலாற்றுப் பகுதி, பக்கம் 80.

47. S. I. I. Vol. V. No. 433.

48. S. I. T. I. Ins. No.345. 604 of 1919.

49. S. I. T. I. Ins. No. 191. 187 of 1909.

50. சாசனத் தமிழ்கவி சரிதம். பக்கம், 29.

51. S. I. T. I. No. 200. 181 of 1909.

52. இரண்டாம் திருமுறை, வரலாற்றுப்பகுதி, பக். 26.

53. புதுக்கோட்டைச் சாசனங்கள், எண். 302.

54. S. I. I. Vol. iv. 426, 427 - and viii, No. 340

55. S. I. I. Vol. V. No. 1358. KAN. Colas. Part II - Page 481.

56. ஞானாமிர்தம் - ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை - முகவுரை, பக்கம் xxviii.

57. டாக்டர் மா. ரா. பெ. ஆ. பக்கம். 370 - 3.

58. ஒல்லென்றருளினபடி என்றே பாடம் காணப்படுகிறது - 1961 ஜனவரி, திருக்கோயில் என்ற திங்கள் இதழைக் காண்க.

59. கல்வெட்டியல் - தமிழக அரசு தொல்லியல் துறை வெளியீடு, பக்கம். 44.

# 4. மூவர் ஆலயங்கள்

## 1. சீகாழித் திருஞான சம்பந்தர் கோயில்

சீகாழியில் திருஞான சம்பந்தருக்குத் தனித் திருச்சுற்றாலயம் உளது. இவரை இங்கு எழுந்தருள்வித்தவள் திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோநேரின்மைகொண்டானின் அடுக்களைப் பெண்டிரில் மூத்த உய்யவந்தாள் இராச விச்சாதரி என்பவள் ஆவாள்.

மூன்றாம் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டில் கங்கைகொண்ட சோழபுரத்தில், கங்கைகொண்ட சோழன் திருமதிலுக்குள் வடகூரில் உத்தமசோழப் பெருந்தெருவில் இருந்த, வானமாளிகையுடையான் வேம்பன் வைசியார் என்பவனின் மகன் உரம் பூண்டான் என்பவன் இக்கோயிலின் முதல் பிரகாரத் திருப்பணிகளைப் புரிந்தான் (388 of 1918)

சோழவளநாட்டு ஆக்கூர் நாட்டுத் தலைச்சங்காட்டுச் சபையினர் தலைச்சங்காட்டில் மும்மடிசோழன் பேரம்பலத்தில் கூடினர்; கழுமலம் ஆளுடைய பிள்ளையார்க்குத் திருப்பாற்போனகம் செய்தருளுதற்காகத் திருமடைப்பள்ளிப் புறமாக நிலம் அளித்தனர். தலைச்சங்காட்டைச் சேர்ந்த சிற்றூராகிய சோழபாண்டிய நல்லூரில் கண்ணாறு எனும் பெயரால் அமைந்த ஐந்துவேலி நிலம் அவரால் தரப்பெற்றது.

திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோநேரின்மை கொண்டானின் 6ஆம் ஆட்சியாண்டில் காளத்திமலையில் இருந்து உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பத்தூர் நாட்டு மாத்தூருடையான் கோவன் நம்பி என்பவன் இவ்வாளுடை"' பிள்ளையாருக்கு அர்ச்சனாபோகமாக நான்குவேலி நிலம் தந்தான்.

கி. பி. 1393இல் வீரவிருபணவுடையார் தில்லை விடங்க நல்லூரில் 140 மாநிலம் தந்துள்ளார்.

இவ்வாளுடைய பிள்ளையார் கோவிலில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யப் பெற்றமையைக் கோப்பெருஞ்சிங்கனது சீகாழிக் கல்வெட்டொன்று காட்டுகிறது..

சீகாழி திருஞானசம்பந்தா் ஆலயத்தில் மங்கையர்க் கரசியாரும் எழுந்தருள்விக்கப் பெற்றுள்ளமை (375 of 1918) கல்வெட்டொன்றில் கூறப்படுகிறது. திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசனின் 12ஆம் ஆட்சியாண்டில் மங்கையர்கரசியார்க்குத் திருவமுதுபடிக்கு நிலமளிக்கப்பட்டது கல்வெட்டிற் கண்டது.

## 2. திருவெண்ணெய் நல்லூர்ச் சுந்தரர் கோயில்

திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலின் உள் தீர்த்தக் குளத்தின் கிழக்குக் கரையில் சுந்தரர் எழுந்தருளியிருந்தார்.

'...........தேவனார் கேணியின் கீழ்க்கரையில் எழுந்தருளி நாச்சிமாரோடும் பூசைகொண்டருளுகின்ற ஆளுடைய நம்பி' ...... என்று கல்வெட்டு இவரைக் குறிக்கிறது.

சுந்தரருக்கு அமுதுபடி உள்ளிட்டனவற்றுக்காகத் திருவெண்ணெய் நல்லூர் நாட்டுச்சபையினர் மேற்படி நாட்டுப் பட்டர்கள் ஆகியோர் அரைவேலி நிலம் தந்தனர். களத்தூரைச் சேர்ந்த சிறிய நம்பி சகஸ்ரன் என்பவன் ஆளுடைய நம்பிக்குத் தோட்ட நிலம் அளித்தான்.

ஆளுடைய நம்பி கோயிலில் திருமுறை ஓதப்பெற்றமையை இன்னொரு கல்வெட்டால் உணரலாம். ஆட்கொண்டார் கோயிலில் மடாதிபத்தியம் செய்யும் உடையார் அகமுடையான் என்பவன் கோயில் நிலத்தை விற்றான்; கிடைத்த காசினை ஆளுடைய நம்பிக்கு அமுதுபடி, திருக்கைக் கோட்டிப் புறமாகக் கோயில் கருவூலத்தில் முதலாக வைத்தான் என்பது அக்கல்வெட்டுச் செய்தி.

### 3. கூகூர்ச் சுந்தரர் கோயில்

கூகூர் இந்நாளில் மருதாநல்லூர் என வழங்கப் பெறும்; குடந்தை வட்டம் சிற்றூர்களில் ஒன்று. இந்நாளில் ஆம்பரவனேசுவரர் என வழங்கும் ஆலயத்தின் பழையபெயர் ஆதித்யேஸ்வரம் என்பதாகும். இக்கோயிலில் நம்பியாரூரர்க்கு அமைந்த சிற்றாலயத்தில் சித்திரைத் திருவிழா நிகழ்த்தப்பெற்றது.

முதல் இராசராச சோழனின் பத்தாம் ஆட்சியாண்டில் நம்பியாரூரர் கோயிலில் சித்திரைத் திருவிழா நடத்துவதற்காக ஊர்ச்சபையார் கோலியக் குடையினர் நிலமும் மனையும் தந்தனர் (229 of 1917). இதே அரசனின் பன்னிரண்டாம் ஆண்டிலும் கூகூர் ஊரவர் திருப்பதிகங்கள் பாடிய நம்பியாரூரர்க்கு நிலம் கொடுத்தனர் (275 of 1917). இவ்விரு கொடைகளும் ஆதித்த ஈஸ்வரம் உடையார் கோயிலாரிடம் தரப்பெற்றன.

### 4. திருஞானம் பெற்ற பிள்ளையார்

திருஞானசம்பந்தர் சீகாழியில் இறைவியின் திருமுலைப்பால் உண்டு திருஞானம் பெற்றார்; திருஞானசம்பந்தராயினார். கல்வெட்டுக்கள் பல **திருஞானம் பெற்ற பிள்ளையார்** எனத் திருஞான சம்பந்தரைக் குறிக்கின்றன.

மூன்றாம் இராசராசனின் இருபத்து மூன்றாவது ஆட்சியாண்டில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோவிலூரில், மும்முடி சோழபுரத்து வியாபாரி ஒருவன் திருஞானம் பெற்ற பிள்ளையாரை எழுந்தருள்வித்தான்; நிலமளித்தான். கேரள குலாசனிச் சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குறி மகாசபையார் இறையிலியாக்கினர் (216 of 1918).

மன்னார்குடி வட்டம் கோட்டூர்க் கொழுந்தீசுவரர் ஆலயத்தில், மூன்றாம் இராசராச சோழனின் ஒன்பதாம்

ஆட்சியாண்டில் நாகமங்கலமுடையான் அம்பலங்க கோயில் கொண்டான் என்பவன் திருஞானம் பெற்ற பிள்ளையாரை எழுந்தருளுவித்தான். கோயிலாரும் ஒரு பார்ப்பனியும் கொடைகள் தந்தனர். (450 of 1918) இராராசனின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் கொழுந்தாண்டார் கோயிலில் எழுந்தருளியிருந்த இத்திருஞானம் பெற்ற பிள்ளையார்க்கு நிலம் தரப்பெற்றது (448 of 1918).

திருக்கொடுங் குன்றத்தில் சடையவர்மன் வீரபாண்டியனுடைய ஒன்பதாவது ஆட்சியாண்டில் கேரளசிங்க வளநாட்டுக் குலசேகரப் பட்டணத்து அருவியூரான கொடுங்குன்றமுடையான் திருஞானம் பெற்ற பிள்ளையாரை எழுந்தருளுவித்தான்.

தலை ஞாயிறு கோவிலில் மூன்றாம் இராசேந்திரன் கல்வெட்டுக்கள் இரண்டில் பார்வதி போகர் ஆலயத்தில் இருந்த திருஞானசம்பந்தர் 'திருஞானம் பெற்ற பிள்ளையார்' என்று கூறப்பெறுகிறார்.

# 5. மூவர் திருஉருவச் சிலைகள்

## 1. தஞ்சைக் கோயிலில்

''பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் என்பவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் முதல் ஸ்ரீகாரியம் ஆராயும் அலுவலனாகத் திகழ்ந்தவன். இவன் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆற்றிய திருத்தொண்டு பலவற்றுள் மூவர் பிரதிமங்களை எழுந்தருள்வித்தைமையும் ஒன்றாகும்[1].

### நம்பி ஆரூரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் படிவம்

பாதாதிகேசாந்தம் பதினெழுவிரல் இரண்டு தோரை[2] உயரமும் இரண்டு திருக்கையும் உடையவராய்க் கனமாக[3] எழுந்தருள்விக்கப் பெற்றது. இது செப்புப் பிரதிமம். இவர் நின்ற பத்மம் இரண்டு விரல் தோரை உயரம் உடையது. இதனொடும்கூடம் செய்த பீடம் எண்விரல் சமசதுரத்து மூவிரலே இரண்டு தோரை உயரம் உடையது.

இவர்க்குப் பொய்கை நாடு கிழவன் கொடுத்தது. ருத்ராக்ஷத் தாழ்வடம் ஒன்றில் பொன்னின் சுரி 56ம் ருத்ராக்ஷம் 56ம் உட்பட நிறை எண்கழஞ்சு ஒன்பது மஞ்சாடி;[4] விலை காசு. 25.

### குறுவாணியக் குடியான பரகேசரிபுரத்து நகரத்தார் கொடுத்தது.

ருத்ராக்ஷம் பொன்னின்சுரி கட்டிற்று ஒன்றும், நாண்படு கண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்சே 7மஞ்சாடி; விலை காசு 3.

**வெண்ணி நகரத்தார் கொடுத்தன**

திருக்கம்பி ஒன்று பொன் கழஞ்சே மஞ்சாடியும் குன்றி; திருக்கம்பி ஒன்று பொன் கழஞ்சேமஞ்சாடி. திரள் மணிவடம் ஒன்று பொன் இருகழஞ்சே மஞ்சாடியும் குன்றி; திருக்கைகாறை ஒன்று பொன் 1 ¾ கழஞ்சே 4 மஞ்சாடி; திருக்கைக்காறை ஒன்று பொன் 1¾ கழஞ்சே 3 ம்ஞ்சாடியும் குன்றி; திருக்காற்காறை ஒன்று பொன் 1¾ கழஞ்சே 3 மஞ்சாடியும் குன்றி; திருக்காற்காறை ஒன்று பொன் 1¾ கழஞ்சே 4 மஞ்சாடியாக இரண்டிற்கு 3¾ கழஞ்சே 3 மஞ்சாடி.

**நங்கை பரவையார் படிவம்**

பதினாறு விரல் உயரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருள்விக்கப் பெற்றது; இவர் எழுந்தருளிநின்ற பத்மம் இருவிரலே இருதோரை உயரமுடையது; இதனொடுங்கூடச் செய்த பீடம் 6 விரலே 2 தோரை சமசதுரத்து மூவிரல் உயரமுடையது.

**இவர்க்குப் பொய்கை நாடுகிழவன் கொடுத்தன**

திருக்கைக்காறை ஒன்று பொன் 1½கழஞ்சாக இரண்டினால் பொன் முக்கழஞ்சு; திருக்காற்காறை ஒன்று பொன் 1½ கழஞ்சாக இரண்டினால் பொன் முக்கழஞ்சு; மோதிரம் ஒன்று பொன் ½ கழஞ்சே மஞ்சாடியும் குன்றி.

**பரகேசரி புரத்து நகரத்தார் கொடுத்தது**

திருகு ஒன்று உட்படப் பட்டைக் காறை ஒன்று பொன் முக்காலே குன்றி.

**வெண்ணி நகரத்தார் கொடுத்தன**

திருக்கம்பி ஒன்று பொன் ¾ கழஞ்சே 2 மஞ்சாடியும் குன்றி; திருக்கம்பி ஒன்று பொன் ¾ கழஞ்சே 2 மஞ்சாடி.

### திருநாவுக்கரசர் பிரதிமம்

பாதாதி கேசாந்தம் 22 விரலே 2 தோரை உயரத்து இரண்டு திருக்கையுடையராகக் கனமாக எழுந்தருள்விக்கப் பெற்றது. இவர் எழுந்தருளி நின்றபத்மம் இருவிரலே ஆறுதோரை உயரமுடையது. இதனொடும்கூடச் செய்த பீடம் எண்விரலே ஆறுதோரைச் சமசதுரத்து நால்விரல் உயரமுடையது.

### இவர்க்குப் பொய்கைநாடு கிழவன் கொடுத்தன

ருத்ராக்ஷச்சுரி பொன்னின் நூலில் கோத்த ருத்ராக்ஷம் ஒன்று உட்பட நிறை ஆறுமஞ்சாடியும் இரண்டுமா; விலை காசு ஒன்று. ருத்ராக்ஷச்சுரி பொன்னின் நூலில் கோத்த ருத்ராக்ஷம் ஒன்று உட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டுமா; விலை காசு ஒன்று.

கண்டிகை ருத்ராக்ஷம் ஒன்றும் சுரி ஒன்றும் நிறை ஐங்கழஞ்சே மஞ்சாடியம் குன்றி; விலை காசு எட்டு.

திருப்பொற்பூ ஒன்று. பொன் ¾ கழஞ்சே 4 மஞ்சாடியும் குன்றி.

திருக்கைக் காறை ஒன்றுபொன் இரு கழஞ்சு; திருக்கைக் காறை ஒன்று பொன் 1 ¾ கழஞ்சு 4 மஞ்சாடி.

### பரகேசரி புரத்து நகரத்தார் கொடுத்தது

ருத்ராக்ஷம் பொன்னின் சுரிகட்டிற்று ஒன்றும் நாண்படு கண்ணும் கொக்குவாயும் உட்பட நிறை கழஞ்சே ஏழுமஞ்சாடி. விலை காசு மூன்று.

### திருஞானசம்பந்தர் பிரதிமம்

பாதாதி கேசாந்தம் இருபத்திரு விரலே 2 தோரை உயரத்து இரண்டு திருக்கை யுடையராகக் கனமாக எழுந்தருளுவிக்கப் பெற்றது. இவர் எழுந்தருளி நின்ற பத்மம் இருவிரலே இரண்டு தோரை உயரமுடையது. இதனொடும் கூடச் செய்த பீடம் ஒன்பதிற்று விரலே இரண்டு தோரைச் சமசதுரத்து நால்விரல் உயரமுடையது.

## இவர்க்குப் பொய்கை நாடு கிழவன் கொடுத்தன

ருத்ராக்ஷச்சுரி பொன்னின் நூலில் கோத்த ருத்ராக்ஷம் ஒன்று உட்பட நிறை அரை கழஞ்சே இரண்டு மஞ்சாடிக்கு விலை 1½ காசு.

தாழ்வட மொன்றில் பொன்னின் சுரி 56ம் ருத்ராக்ஷம் 56ம் உட்பட நிறை எண் கழஞ்சே 4 மஞ்சாடியும் குன்றிக்கு விலை 25 காசு.

திருப்பொற்பூ ஒன்று பொன் கழஞ்சே குன்றி.

திருக்கைக் காறை ஒன்று பொன் இரு கழஞ்சே குன்றி.

திருக்கைக் காறை ஒன்று பொன் 1 3/4 கழஞ்சே 4 மஞ்சாடி.

திருப்பட்டிகை ஒன்று பொன் இரு கழஞ்சு.

## பரகேசரி புரத்து நகரத்தார் கொடுத்தது

ருத்ராக்ஷம் பொன்னின் சுரிகட்டியது ஒன்றும் நாண்படு கண்ணும் கொக்கு வாயும் உட்பட நிறை கழஞ்சே ஏழு மஞ்சாடிக்கு விலை காசு மூன்றேகால்.

# 6. திருவாரூர்த் திருக்கோயிலில்

திருவாரூர் மூலஸ்தானமுடையார் (வன்மீகிநாதர்) கோயிலில் இரண்டாம் குலோத்துங்க சோழன், ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசர், ஆளுடைய நம்பி, பரவை நாச்சியார் ஆகியோர் திருவுருவங்களை எழுந்தருள்வித்தான்.

இரண்டாம் குலோத்துங்கன் தம் ஏழாம் ஆட்சியாண்டில், ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியாருக்கும் அர்ச்சனபோகமாகக் கெய மாணிக்க வளநாட்டு மருகல் நாட்டுத் திருவாதிரை மங்கலம் என்னும் ஊர் 'அனபாயநல்லூர்' எனப் புதுப்பெயர் இடப்பெற்றும், 12ஆவது ஆண்டு முதல் தான விநோத நல்லூர் என்னும் ஊரும் தரப்பெற்றன. ஆளுடைய பிள்ளையாருக்கும் திருநாவுக்கரசருக்கும் அர்ச்சனாபோகமாகச் சிவபாத சேகர நல்லூர் தரப்பெற்றது. நித்திய நைமித்திய வழிபாடுகள் நிகழ்ந்தன.

ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியாருக்கும் நான்கு சந்தியமுது படையலுக்கும், சிறப்புத் திருநாள், திருக்கார்த்திகைத் திருநாள், திருமார்கழித் திருவாதிரைத் திருநாட்களில் சிறப்பமுது படையலுக்கும் ஏற்பாடு செய்தான் இவ்வேந்தன். சுந்தரர் எழுந்தருளும் திருநாட்கள் ஐம்பத்தாறு; அவை வருமாறு:[5]

| | |
|---|---|
| அமாவாசைத் திருநாள் | 12 |
| சங்கராந்தித் திருநாள் | 8 |
| விஷுவயனத் திருநாள் | 4 |
| கிராகணத் திருநாள் | 2 |
| திருமார்கழித் திருவாதிரை | 1 |

| | |
|---|---|
| தைப்பூசத் திருநாள் | 1 |
| சித்திரைத் திருநாளில் திருத் தமனகம் சார்த்தியருளும் திருநாள் | 1 |
| ஆடிப்பூரத் திருநாள் | 1 |
| ஆவணியாவிட்டத் திருநாள் | 1 |
| பவித்திரம் சார்த்தியருளும் திருநாள் | 1 |
| ஐப்பசிச் சதயத் திருநாளில் எழுந்தருளும் திருநாள் | 6 |
| திருப்பங்குனித் திருநாளில் திருக்கொடி ஏற்றுகைக்குத் திருமுளை சார்த்த எழுந்தருளும் திருநாள் | 1 |
| தீர்த்தத்திற்குத் திருமுளை சார்ந்த எழுந்தருளும் திருநாள் | 1 |
| திருநாளில் எழுந்தருளும் திருநாள் | 10 |
| திருஆடித் திருநாளில் திருநாள் | 6 |
| ஆக | 56 |

ஆளுடைய பிள்ளையாருக்கும் திருநாவுக்கரசர்க்கும் மூன்று சந்தி அமுதுபடையலும், சிறப்புத் திருநாள், திருக்கார்த்திகைத் திருநாட்களில் சிறப்பமுது படையலும் நிகழ்த்தப்பெற்றன. இவர்கள், ஐப்பசி சதயத் திருநாளில் ஒருநாளும், உத்திரத் திருநாளில் ஒருநாளும் மட்டும் திருவீதிக் கெழுந்தருளினர்.

### 3. வேறு சில கோயில்களில்

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பிரதிமங்கள் எழுந்தருள்விக்கப் பெற்றமை பற்றிய செய்திகள் பின்வருமாறு:

சித்தலிங்க மடத்தில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அறிந்தவன் பல்லவராயன் என்பவன் கைக்கோளப் பெரும் படையினரால் எழுந்தருள்விக்கப் பெற்ற ஆளுடைய பிள்ளையார்க்கு நிவந்தம் தந்தான். 2000 காசுகளை முதற் பொருளாக்கி வட்டியால் வழிபாட்டுத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஏற்பாடு செய்தான் (418 of 1909).

திருப்புத்தூரில் திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டியனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் கைலாசமுடைய நாயனார் ஸ்ரீ கோயிலில் திருநாவுக்கரசு தேவர் படிவத்தைத் தேவரடியாள் ஒருத்தி எழுந்தருளுவித்தாள்; நில நிவந்தம் தந்தாள். (117 of 1918).

கோயில் தேவராயன் பேட்டையில் மூன்றாம் இராசேந்திரனின் ஐந்தாமாண்டில் பிள்ளை செழியக் கோனார் தீட்டின்படி திருநாவுக்கரசரின் பிரதிமம் எழுந்தருளுவிக்கக் கோயில் நிலம் விற்கப்பெற்றது. பெற்ற 4000 காசுகளால் பிரதிமம் எழுந்தருள்விக்கப்பெற்றது. (278 of 1923)

திருக்கச்சூரில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் திருநாவுக்கரசர் எழுந்தருள்விக்கப் பெற்றார். எழுந்தருள்விக்கப் பெற்ற ஆண்டு அறியக் கூடவில்லை (316 of 1909)

திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரராசேந்திரன் என அமைந்த மூன்றாம் குலோத்துங்கனின் பதினான்காம் ஆண்டுக்குரிய 'அகஸ்திய கொண்டா' கல்வெட்டு, உத்தம சோழ கங்கனாயின செல்வகங்கனின் தேவி திருநாவுக்கரசரை எழுந்தருள்வித்து விழாக்களுக்குக் கொடை தந்ததனைக் கூறுகிறது. (559 of 1909).

திருவலஞ்சுழியில் காணியாளர் எழுந்தருளுவித்த திருநாவுக்கரசு தேவர், திருவாதவூரடிகள், திருக்கண்ணப்ப தேவர் பிரதிமங்களுக்கு, இரண்டாம் இராசராசனின் பன்னிரண்டாம் ஆண்டில், திருமடைவிளாகத்தில் இருக்கும் ஆட்கொண்டான் தேவும் திருவும் உடையாள், கிழக்கடைய நின்றாள். என்னும் இருதளிப்பெண்டிர் நிவந்தம் தந்தனர்.

முதல் இராசேந்திரனின் இருபதாம் ஆண்டில் திருமழபாடியில் பிள்ளையார் திருஞான சம்பந்த அடிகள், திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனார் ஆகியோர் பிரமிங்களைத் திருமாலரங்கனான திருப்பளித்தாமப் பிச்சனும் அவன் மனைவியும் எழுந்தருள்வித்தனர்; வழிபாட்டிற்கு நிவந்தம் தந்தனர் (37 of 1920).

திருவாவடுதுறைத் திருக் கோவிலில், ஒரு முழமும் நான்கு விரலுயரமும் உடைய திருநாவுக்கரைய தேவர், பீடமுட்பட ஒரு முழம் ஆறு விரல் உயரத்தில் அமைந்த சிவஞான சம்பந்த அடிகள்[7], பதுமத்துடன் ஒருமுழம் ஆறுவிரல் உயரத்தில் அமைந்த நம்பி யாரூரனார் ஆகிய மூவர் முதலிகளைத் திருக்காளத்திப் பிச்சன் என்பான் எழுந்தருளுவித்தான்.

திருக்குருகாவூர் வெள்ளடையில் குலோத்துங்க சோழனின் பதின்மூன்றாமாண்டில் மூவர் முதலிகள் எழுந்தருள்விக்கப் பெற்றனர்.

கோயிலூர் பால புரீசுவரர் கோயிலில் சகம் 1394இல் மறமடக்கியான் இராசேந்திர சோழபுரத்தைச் சேர்ந்த திருப்பனூர் உடையார் மன்றன் வணிகச் சக்கரவர்த்திகள் சுந்திர நாயனாரை எழுந்தருளுவித்தார் (Pd. 808).

## அடிக்குறிப்புகள்

1. S. I. I. Vol. II Part. II No. 38 and 41.
2. தோரை - நெல் 8 தோரை - 1 விரல்

   12விரல் - 1 சாண்

   2 சாண் - 1 முழம்
3. Salid Image - (உள் இடைவெளி இல்லாதது).
4. 2 குன்றி - 1 மஞ்சாடி; 20 மஞ்சாடி - 1 கழஞ்சு.
5. S. I. I. Vol. vii No. 485, 269 of 1901.
6. S. I. I. Vol. viii No. 288.
7. கொச்சைக்கிறைவன் சிவஞான சம்பந்தன் - திருக்ஷேத்திரக் கோவை - II, சிவஞான சம்பந்தராயினார் - பெரிய புராணம் - திருஞான சம்பந்தர் புராணம், செ. 69.

# 7. குகைகள் திருமடங்கள்

## 1. குகைகள்

**திருஞானசம்பந்தன் குகை**

திருப்புதூர் வட்டம் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் திருஞான சம்பந்தன் குகை என்று ஒரு குகை இருந்தது. உருத்திர கோடீஸ்வரமுடைய நாயனார் திருமடை விளாகத்தில் இது இருந்தது.

இக்குகையில் ஆண்டார்களுக்கு அன்னம் பாலிக்கப் பொன்னமராவதியைச் சேர்ந்த திருக்கொடுங் குன்றம் உடையான் கேரளராசன் ஆன வீரமழகிய நிஷதராசன் என்பார் நிலமளித்தார்.

இச்செய்திகளை மூன்றாம் குலோத்துங்க சோழனின் 21 ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துரைக்கிறது (311 of 1928).

கும்பகோணம் வட்டம் முன்னியூரிலும் திருவகத் தீச்வரமுடையார் கோயில் தெற்கில் திருமடை விளாகத்தில் திருஞானசம்பந்தன் குகை இருந்தது. புத்தூரான திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்துப் பெருங்குடி மஹாசபையார், இக்குகைக்குப் பூண்டியுடையான் உதையஞ் செய்தான் அளித்த நிலத்தை ஊர்க் கீழ் இறையிலியாக்கிய செய்தி மூன்றாம் இராசராசனது 22ஆம் (கி. பி. 1200) ஆட்சியாண்டுக் கல்லெழுத்து அறிவிக்கின்றது (609 of 1902).

**திருநாவுக்கரசு குகை**

திருக்குறுக்கையில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய 29ஆம் ஆட்சியாண்டு (கி. பி. 1201க்குரிய)

கல்வெட்டுத் திருநாவுக்கரசுகுகை என்று ஒரு குகையைப் பற்றிக் கூறுகிறுது. இக்குகை கட்டுவதற்கும் இக்குகைக்கு வரும் அபூர்விகளுக்கும் திருவைகாசித் திருநாளுக்கு வரும் மகேசுவரர்களுக்கு உணவு அளிக்கவும் நெல்தானம் செய்யப் பெற்றது. (219 of 1917) திருத்தாண்டகம் ஓதுவது குறித்தும் இக்கல்லெழுத்துக் கூறுகிறது.

**ஆலாலசுந்தரன் குகை**

மிழலை நாட்டுத் தலைவராகிய புலியூருடையான் ஆதித்த தேவன் என்பாருடைய மகளும், கண்ணமங்கலமுடையான் வீமப்பிள்ளை என்பாருடைய மனைவியும் ஆகிய ஒருவர், திருமணச்சேரித் திருக்கோயிலில் அம்மன் திருக்கோயிலைக் கட்டுவதற்கும், பூண்டி என்னும் ஊரினராகிய புகலிவேந்தர் என்பார் தங்குவதற்கும் ஆலால சுந்தரன் குகை என்று ஒரு குகை கட்டுவதற்குமாக நன்கொடை வசூலித்தமை குறித்து மூன்றாம் இராசராசனின் ஆறாவதின் எதிராமாண்டு (1222ன் குரிய) கல்லெழுத்துக் கூறுகிறது. (28 of 1914).

# 8. திருஞான சம்பந்தர் திருமடங்கள்

## 1. மதுரை

மதுரைமாநகரில் திருஞான சம்பந்தர் திருமடம் இருந்ததனைச் சடையமர்வன் குலசேகர பாண்டியனுடைய இரண்டாவது ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் குறிக்கிறது. இவ்வாண்டில் பாண்டியன் தன் அரியணையில் எழுந்தருளி இருந்து, சுவாமிகள் செல்வத் திருவாரூர் தக்ஷிண கௌமுகி மடத்து ஆசாரிய சிஷ்யரில் தத்புருஷதேசிகர் திருவாய் மொழிந்தருளினபடி மாடக்குளக் கீழ் மதுரைத் திருஞான சம்பந்தன் மடத்திற்கு[1] விலைகொண்டு நிலமளித்துள்ளான்.

## 2. திருவேடகம்

திருவேடகத்தில் உள்ள திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோநேரின்மை கொண்டானுடைய சிதைந்த கல்வெட்டு, 'இவ்வூரில் இருந்த திருஞானசம்பந்தன் மடத்தில் இருபது தபஸ்யருக்கு உணவு அளித்தற்காக' நிலந் தரப் பெற்றதனைக் கூறுகிறது. (681 OF 1905)

## 3. திருப்புத்தூர்

முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 21ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் திருப்புத்தூரில் இருந்த திருஞானசம்பந்தன் திருமடத்து ஆசாரியர் ஸ்ரீகண்ட சிவன் என்பாருக்கு நிலம் விற்கப் பெற்றமை காட்டுகிறது. (129 OF 1908)

## 4. திருவொற்றியூர்

திரிபுவனச் சக்கரவர்த்தி விசைய கண்ட கோபால தேவனின் காலக் கல்வெட்டு ஒன்றில், ''திருக்கோவலூரினனாய வணிகன் ஒருவன் நிலம் விலைக்குப் பெற்றான்; திருவொற்றியூரில்

இருந்த திருஞானசம்பந்தர் மடத்தில் மாகேசுவரர்க்கு உணவு ஊட்டுதற்காகத் தானமாக அளித்தான்'' என்னும் செய்தி காணப்பெறுகிறது. (238 / 1912)

### 5. தென்கரை

சோழவந்தானுக்கு அருகில் உள்ள சிற்றூர் தென்கரை; இவ்வூர்க் கோயிலில் திருஞான சம்பந்தர் திருமடம் இருந்தமை முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் பதினான்காம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்றில் கண்டது.

### 6. முன்னியூர்

'முன்னியூரில் உள்ள திருவகத்தீசுவரம் உடைய நாயனார் கோயில் தென்புறம் திருஞானசம்பந்தர் திருமடம் இருந்தது' என்பது திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசன் கல்வெட்டொன்றில் கண்டது.

### 7. காமரசவல்லி

காமரச வல்லியில் திருஞான சம்பந்தர் மடம் இருந்தது. இம்மடத்துக்கு, ஊற்றுக் காட்டுக் கோட்டத்துக் குன்றங்கிழான் திருநாவுக்கரசு தேவன் என்பவன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசேந்திரனுடைய 12ஆவது ஆட்சியாண்டில் நிலக்கொடை தந்தான்.

### 8. திருவீழிமிழலை

திருவீழிமிழலையில் வடக்கு வீதியில் திருஞான சம்பந்தர் திருமடம் இருந்தது. இதே வீதியில், திருநாவுக்கரசர் மடமும் இருந்தது - (392 OF 1928). திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், வாதவூரடிகள் ஆகியோருக்குச் சுற்றாலயங்கள் செய்விக்கப் பெற்றிருந்தன.

### 9. பட்டீச்வரம் கல்வெட்டு

பட்டீச்வரம் பலிபீடத்தில் உள்ள மூன்றாம் இராசராசன் காலச் சிதைந்த கல்வெட்டொன்று பழையாறையில்,

திருஞான சம்பந்தர் திருமடம்

திருநாவுக்கரசர் திருமடம்

திருமூலதேவர் திருமடம்

ஆகியவை இருந்ததாகக் குறிக்கிறது. (261 of 1927)

## 10. திருச்சத்திமுற்றம்

திருச்சத்தி முற்றத்தில், உடையார் கோயில் காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலுக்குக் கிழக்கே திருஞானசம்பந்தன் திருமடம் இருந்தது.

இம்மடத்தில் திருச்சத்தி முற்றத்து முதலியார் சந்தானத்தவர் அருளாட்சி செய்தனர். இப்பிரிவினர் திருவானைக்கா நாற்பத் தெண்ணாயிரவன் மடம் (586 / 1908) வலிவலத்து மனத்துள் நாயனார் மடம் (109/1911) கோவிலூர் கூத்தாடு நாயனார் மடம் (218; 220 of 1908) ஆகிய மடங்களில் தலைவராகவும் இலங்கினர்.

திருச்சத்தி முற்றத்து முதலியார் சந்தானத்தை சேர்ந்த தவப்பெருமாள் ஆயின ஞானசிவன் (392 / 1908) திருஞான சம்பந்தர் மடத்துத் தலைவராகக் கூறப்பட்டுள்ளார். இன்று கோயிலின் கிழக்கே இடிந்த மண்டபம் காணப் பெறுகிறது.[2]

1. இந்நாளில் தெற்காவணி மூலவீதியில் திருஞானசம்பந்தர் திருமடம் திகழ்கிறது.

2. கல்வெட்டு - தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை இதழ் காண்க.

# 9. திருநாவுக்கரசர் மடங்கள்

## 1. சிதம்பரம்

கோப்பெருஞ்சிங்கனின் முப்பத்தாறாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில், ''சிதம்பரத்தில் அம்பலநாயகப் பெருந்தெரு திருநாவுக்கரைசு தென்திருமடம் இருந்தது. உடையார் அழகிய திருவையாறுடையார் என்பவர் இங்கே வாழ்ந்தார்'' என்னும் செய்திகள் கூறப்பெற்றுள்ளன[1].

## 2. திருவான்மியூர்

மூன்றாம் குலோத்துங்கனின் இருபத்தைந்தாம் ஆண்டுக்குரிய வேளச்சேரிக் கல்லெழுத்துச் சேதிராயதேவன் தொண்டை மண்டலத்துக் குலோத்துங்க சோழவளநாட்டுத் திருவான்மியூரில் இருந்த திருநாவுக்கரசு மடத்துக்கு வேளச்சேரியில் நிலமளித்தான் என உரைக்கும். (303 of 1911)

## 3. திருவீழிமிழலை

திருவீழிமிழலையில் வடக்குவீதியில் திருநாவுக்கரசர் மடம் இருந்தது. இம்மடத்திற்குரிய நில விவரங்களைத் திரிபுவனச் சக்கரவர்த்தி இராசேந்திரனின் கல்வெட்டொன்று காட்டுகிறது (402 of 1908).

## 4. திருப்பாலத்துறை

திருச்சிமாவட்டம் திருப்பாலத் துறையில் உள்ள முதல் இராசராசனின் இருபத்திரண்டாம் ஆண்டுக் கல்லெழுத்து, ''இவ்வூர்க் கோயிற்கருகில் இருந்த திருநாவுக்கரைசு தேவன்

1. (S. I. I. Vol. XII. No. 245, vii, No. 43)

மடத்தில் மகேசுவரர்க்கு உணவு அளிக்கத் தரப்பெற்ற நிவந்தத்தைக் கூறுகிறது. (538 of 1908)

## 5. திரிபுவனி

புதுச்சேரிப் பகுதி திரிபுவனியில் திருநாவுக்கரைசர் திருமடம் இருந்தது. பெருமாள் திருமேனி கலியாணத் திருமேனியாகவும், ஊரவர் நலம் பெறவும், திருநாவுக்கரைசு தேவன் திருமடத்தில் மாகேஸ்வரரும் சிவயோகிகளும் உணவுகொள்ளப் பன்னிரண்டாம் தரத்தில் நிலம் தரப் பெற்றமை முதற்குலோத்துங்கனின் நாற்பத்தெட்டாம் ஆண்டுக் கல்வெட்டிற் கண்ட செய்தி. (203 of 1909)

## 6. திருவதிகையில்

### அ. திருநாவுக்கரையர் திருமடம்

திருவதிகையில் இருந்த திருநாவுக்கரசு தேவ மடத்துக்கு மடப்புறமாக மணவில் அரும்பாக் கிழானுக்குரிய 48000 குழி புன்செய் நிலம் நன்னிலமாக அதியரைய மங்கலத்து நகரத்தாரால் மாற்றித் தரப்பெற்றது என்பது முதல் குலோத்துங்கனின் நாற்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் கண்டது. (382 of 1921)

### ஆ. வாகீச மடம்

திருவதிகையில் 'வாகீசன் மடம்' என்னும் திருமடமும் இருந்தது. முதல் குலோத்துங்கனின் நாற்பத்து நான்காமாண்டில் கணிச்சைப்பாக்கத்தவர் 2000 குழி நிலமும் பனைப்பாக்கத்தூரார் ஒன்றரை வேலி நிலமும் இதற்கு மடப்புற இறையிலியாகத் தந்தனர். (S. I. I. viii - 324)

# 10. சுந்தரர் திருமடங்கள்

## 1. திருநெல்வேலி

திருநெல்வேலியில் ஆலாலசுந்தரன் திருமடம் என்றொரு மடம் இருந்தது. இம்மடத்தில் இருக்கும் தபசியரில் ஒருவராகச் சேய்ஞலூர் திருவெண்காடுடையான் அனவரதன்... என்வன் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய பதினேழாம் ஆட்சியாண்டுக் (கி. பி. 1233க்குரிய) கல்வெட்டொன்றில் குறிக்கப் பெறுகிறான்[1].

## 2. காளையார் கோயில்

காளையார் கோயிலில் ஆலாலசுந்தரன் திருமடம் இருந்தமை மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டியனுடைய பதினான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கண்டது. ஆலாலசுந்தரன் திருமடத்து முதலியார்... சம்பந்தப் பெருமாளுக்குத் தரப்பெற்ற நிலக்கொடை இக்கல்வெட்டில் இயம்பப் பெறுவது[2].

## 3. திருஎதிர்கொள்பாடி

இந்நாளில் மேலைத் திருமணஞ்சேரி என்று வழங்கும் எதிர்கொள் பாடியில் கீழைத்திரு வீதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மடம் இருந்தது.

## 4. காஞ்சி

கச்சித் திருவேகம்பத்தின் கிழக்குக் கோபுரத்திற்கருகில் ஆலாலசுந்தரன் திருமடம் இருந்தது என்பது கல்வெட்டொன்றில் கண்ட செய்தி.

1. S. I. I. Vol. V. No. 422.

2. S. I. I. Vol. V. No. 432.

# 11. பிற செய்திகள்

## 1. திருஞானசம்பந்தீச்வரம்

தஞ்சைமாவட்டம் திருப்பாலத்துறையில் உள்ள மூன்றாம் இராசராசனுடைய இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (437 of 1912) திருப்பாலத்துறைக் கோயிலில் திருநடை மாளிகையின் கிழக்குப் புறத்தில் திருஞான சம்பந்தீச்வரம் என்னும் சுற்றாலயம் இருந்தமையைக் கூறுகிறது.

'பொருவனூர் உடையான் அரையன் காறையழகன் என்வன் திருஞான சம்பந்தீசுவரமுடையாரை எழுந்தருளிவித்தான். திருச்சிற்றம்பல நல்லூரிலும் இராச கம்பீர நல்லூரிலும் நிலம் வழங்கினான்' என்பது கல்வெட்டிற் கண்ட செய்தி.

## 2. திருநட்டப் பெருமான் ஆளுடையபிள்ளை

இரண்டாம் இராசாதிராசனின் நான்காவதாட்சி யாண்டுக்குரிய சீகாழிக் கல்வெட்டொன்று. ''திருஞானசம் பந்தரைத் திருநட்டப் பெருமான் ஆளுடைய பிள்ளை'' எனக் குறிக்கிறது.

இடது கையில் பொற்கிண்ணமும், வலது கை சுட்டிக் காட்டும் சூசிமுத்திரையும் உடையதாக அமையும் திருஞானசம்பந்தர் திருக்கோலத்தைக் கல்வெட்டு இவ்வாறு குறிப்பதாகக் கொள்ளலாம்.

வெண்மணி கிழான் ஆட்கொண்ட நாயகன் என்பவன் நாள் வழிபாடு திருநாள் அமுதுபடி முதலானவற்றுக்காகக் கழுமலத்தில் முக்காணி அரைக்காணிக் கீழ் ஒரு மா நிலம் தந்தமை கூறுகிறது இக்கல்வெட்டு (379 of 1918).

### 3. திருமுறைகளைச் செப்பேடு செய்வித்தமை

மணவிற் கூத்தன் காலிங்கராயன் தில்லையில் திருமுறைகளைச் செப்பேடு செய்வித்தான். இதனை,

**"முத்திறத்தார் ஈசன் முதல்திறத்தைப் பாடியவாறு**
**ஒத்தமைத்த செப்பேட்டின் உள்ளெழுதி - இத் தலத்தின்**
**எல்லைக் கிரிவாய் இசையெழுதி னான்கூத்தன்**
**தில்லைச்சிற் றம்பலத்தே சென்று"**

என்னும் வெண்பா கூறுகிறது. இதில் பாடியவாறு என்னுஞ் சொற்றொடர் கவனிக்கற்பாலது. சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகியவர்கள் பதிகங்களை எம்முறையில் பாடியருளினார்களோ அம்முறையிலேயே அப்பதிகங்கள் மணவிற் கூத்தனது முயற்சியால் எழுதப் பெற்றன என்று இச்சொற்றொடரால் அறியலாகும்.

எத்தலத்திற்குப்பின் எத்தலத்திற்குச் சமய குரவர் சென்றார்கள் என்றும், அங்குப் பாடிய பதிகங்கள் எவை என்றும், ஆய்ந்து திருவருட்டுணை கொண்டு, பெரிய புராணத்தை எழுதியவர் சேக்கிழார் என்பது யாவரும் அறிந்ததொன்று.

சேக்கிழார் காலத்துக்கு முன்பே பதிகங்கள் பாடிய வரிசை முறை கொண்ட செப்பேடுகள் இருந்தன என்பது இப்பாடலால் உறுதி பெறுமாயின் சேக்கிழார் சுவாமிகளக்கு இச்செப்பேடுகளும் பயன் பட்டிருத்தல் கூடும் என்று கூறலாம்.

ஒத்தமைத்த என்ற சொற்றொடரும் கவனிக்கத்தக்கது. செப்பேடுகள் ஒவ்வொன்றும் ஒரே அளவினதாக இருந்திருத்தல் வேண்டும்; ஒவ்வொரு செப்பேட்டில் ஒவ்வொரு பதிகம் மட்டும் எழுதப்பட்டது போலும் என்று இதனால் கூர்ந்து அறியலாம்.

## 4. இராசராசனின் திருப்பதிய விண்ணப்பக் கல்வெட்டில்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இராசராசன் திருப்பதியம் விண்ணப்பஞ்செய்ய நியமித்த பிடாரருள் பின் வருவோர் மூவர் முதலிகளின் பெயர்களைச் சூடியவராவர்[1].

1. மாதேவன் திருஞான சம்பந்தனான ஞானசிவன்
2. சிவக்கொழுந்து சம்பந்தனான அகோரசிவன்
3. சோமன் சம்பந்தனான ஞானசிவன்
4. இராமன் சம்பந்தனான சத்யசிவன்
5. சம்பந்தன் ஆரூரரான வாமசிவன்
6. பொற்சுவரன் திருநாவுக்கரையனான பூர்வசிவன்
7. கம்பன் திருநாவுக்கரையனான சதாசிவன்
8. அப்பி திருநாவுக்கரையனான நேத்ரசிவன்
9. ஆரூரன் திருநாவுக்கரையனான ஞானசிவன்
10. மாதேவன் திருநாவுக்கரையனான விக்ஞான சிவன்
11. சக்தி திருநாவுக்கரையனான ஈசானசிவன்
12. ஆச்சன் திருநாவுக் கரையனான நேத்ரசிவன்
13. கயிலாயன் ஆரூரான் தர்மசிவன்
14. ஐஞ்நூற்றுவன் சியாரூரான் தத்புருஷசிவன்
15. மறைக்காடன் நம்பியாரூரனான ஞானசிவன்
16. பொற்சுவரன் நம்பி யாரூரரான தர்மசிவன்

1.தஞ்சை பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் (முதற்பகுதி) தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, பக்கம். 48 - 53.

## வரலாற்றுப் பட்டியல்

# 1. திருஞானசம்பந்தர்

| பெயர் சூடியோர் | ஊர் | அரசன் | ஆண்டு | பதிப்பு |
|---|---|---|---|---|
| 1. உடையான் திருஞான சம்பந்தனும் இவன் தமையன் திருஞானசம்பந்தர் | இரும்பா நாடு | மாறவர்மன் குலசேகரன் | 16 | Pudukkotai State INS. No. 396 |
| 2. பொல்லாத பிள்ளையான திருஞான சம்பந்த மாணிக்கம் | குளத்தூர் | மூன்றாம் குலோத்துங்கன் | 30 | " No. 162 |
| 3. சேந்தன் திருவிடைக்கரை யாண்டாரான திருஞான சம்பந்தர் | இரும்பாநாடு | சடையவர்மன் வீரபாண்டியன் | 16 | " No. 291 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. திருஞானசம்பந்தன் | குடுமியான் மலை | மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 1. 14 | " No. 291 |
| 5. புகலிவேந்தன் புராண தேவன்...வ திருஞான சம்பந்தன் | திருமங்கலக்குடி | கோப்பெருஞ் சிங்கன் | 25 | S. I.I. Vol XII No. 228 |
| 6. குலையன் பொத்தியன் செல்வஞான சம்பந்தன் | பேரூர் | விக்கிரம சோழன் | - | S. I. I. V. 226 227, 36 |
| 7. திருஞான சம்பந்த மாராயன் | திருக்கழுக்குன்றம் | சடையவர்மன் சுந்தரபாண்டியன் | 9 | S. I. I. V. No. 483 |
| 8. திருஞான சம்பந்த பல்லவரையன் | திருவெண்காடு | திரிபுவனச் சக்... இராசராசன் | 22 | S. I. I. V. 984 |
| 9. நக்கன் திருஞானசம்பந்தன் | சிதம்பரம் | கோப்பெருஞ் சிங்கன் | 5 | S. I. I. VIII 50 |
| 10. கவுணியர் பெருமான், ஆண்டாள் கவுணியர் பெருமான் | திருவண்ணாமலை | மூன்றாம் குலோத்துங்கன் | - | S. I. I. VIII 128, 130,149 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. சீகாழிப் பிள்ளையான மாதவராயன் கம்பனாயன் திருஞான சம்பந்தன் (நாற்பத்தெண்ணாயிரப் பேரேரியில் ஒருமடையின் பெயர் திருஞான சம்பந் தன்) திருப்புவனவாசல் | | மாறவர்மன் சுந்தரபாண்டியன் | 14 | S. I. I. VIII No. 213 |
| 12. கலசப்பாடியுடையார் திருஞான சம்பந்தர் நாவலூருடையார் | பிரான்மலை | - | - | S. I. I. VIII No.422. |
| 13. கவுணியர் பெருமான் | காளத்தி | கண்டகோபாலன் | 7 | S. I. I. VIII No.500 |
| 14. திருஞானசம்பந்தர் | கொறுக்கை | இராசாதிராசன் II | 6 | 224 of 1917 |
| 15. திருஞான சம்பந்தப் பல்லவரையன் | திருவானைக்கா | வீரசோமேஸ்வரன் | 26 | S. I. I. IV. No.429 |
| 16. உடையான் பெருமாளான பெருங்கருணையாள.... திருஞானசம்பந்தன் | நார்த்தாமலை | சுந்தரபாண்டியன் | 27 | Pudukkotai State INS. No. 531 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17. கண்ணன் சம்பந்தப் பெருமாளான சேனை பரிபால நாடாழ்வான் | கீரனூர் | பரகேசரி இராசராசன் II | 28 | " | 198 |
| 18. பெரியான் சம்பந்தன் | நெய்வாசல் | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 6 | " | 262 |
| 19. நம்பி சம்பந்தப் பெருமாள் | நெய்வாசல் | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 22 | " | 317 |
| 20. பெருமாள்நாயனான நல்ல ஞானசம்பந்தன் | ஆதனூர் | சடையவர்மன் சுந்தரபாண்டியன் I மாறவர்மன் | 7 | " | 481 |
| 21. சம்பந்தன் | பழங்கரை | சுந்தரபாண்டியன் II | 12 | Pudukkotai State INS. No. 343 | |
| 22. பரியன் சம்பந்தன் | வாளவர் மாணிக்கம் | சடையவர்மன் சுந்தரபாண்டியன் | 7 | " | 511 |
| 23. ....சம்பந்தன் | நார்த்தாமலை | சடையவர்மன் பராக்கிரமன் | 5 | " | 620 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 24. வெளியாற்றூருடையான் சம்பந்தன் | நார்த்தாமலை | சடையவர்மன் பாராக்கிரமன் | 6 | " | 621 |
| 25. சம்பந்தன் பொன்னம்பலக்கூத்தன் | பின்னங்குடி | ,, ,, | 7 | " | 626 |
| 26. சீகாழிவேந்தன் | பில்லமங்கலம் | மாறவர்மன் குலசேகரன் I | 32 | " | 408 |
| 27. சொக்கஞான சம்பந்தர் | கோட்டையூர் | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 21 | " | 310 |
| 28. சொக்கஞான சம்பந்தன் பெருமாள் | ஆதனூர் and ராங்கியம் | மாறவர்மன் சுந்தர பாண்டியன் | 12 | "<br>" | 351 and 669 |
| 29. நன்னெறிப் பூண்டியுடையான் சொக்க ஞான சம்பந்தன் | பில்லமங்கலம் | மாறவர்மன் குலசேகரன் I | 18 | " | 397 |
| 30. திருஞானசம்பந்தர் | நெய்வாசல் | சகம் 1350 | | Pd. | 786 |
| 31. பரசமய கோளரி மாமுனி | திருப்பாதிரிப் புலியூர் | குலோத்துங்கன் | 49 | Vii. | 752 |

## 2. திருநாவுக்கரசர்

| பெயர் சூடியோர் | ஊர் | அரசன் | ஆண்டு | பதிப்பு |
|---|---|---|---|---|
| 1. அப்பர் | பில்லமங்கலம் | மாறவர்மன் குலசேகரன் | 18 | Pudukkoti State INS. No. 397 |
| 2. திருநாவுக்கரசு பெரிய நாயனார் | பூவாலைக்குடி | சடையவர்மன் சுந்தரபாண்டியன் | 15 | " 490 |
| 3. நாராயணன் சோழனடிகளான திருநாவுக்கரையன் | .. | இராசகேசரி | 15 | " 330 of1910 |
| 4. ஆதிகுண அடிகளான திருநாவுக்கரையன் | திருநாகேசுவரம் | இராசேந்திரன் I | 30 | S. I. I. vi. 33 |
| 5. குன்றங்கிழான் திருநாவுக்கரசு தேவன் | காமரசவல்லி | இராசேந்திரன் | 12 | - |

## 3. சுந்தரர்

| பெயர் சூடியோர் | ஊர் | அரசன் | ஆண்டு | பதிப்பு |
|---|---|---|---|---|
| 1. நம்பியாரூரரான இராக் கதப்பெருமாள்; நம்பியாரூரர் | திருநெல்வேலி | சடையவர்மன் வீரபாண்டியன் | 4 | S. I. I. Vol. V 418 |
| 2. நம்பியாரூரர் | சேந்தமங்கலம் | வீர சோழன் | 36 | Pudukootai state INS. No. 171 |
| 3. நம்பியாரூரரான கங்கை கொண்ட சோழமாராயன் | குடுமியான் மலை | சடையவர்மன் வீரபாண்டியன் | 13 | " No. 367 |
| 4. ஆரூரர் வேத வனமுடையான் | கொள்ளிக்காடு | குலோத்துங்கன் I | 32 | 128 of 1936 |
| 5. கோயில் வடுகனான ஆலால சுந்தர பட்டன். | பின்னங்குடி | மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 15 | Pudukkotai 297 |
| 6. ஆலால சுந்தர பட்டன் | குடுமியான் மலை | மாறவர்மன் சுந்தர பாண்டியன் I | 12 | " 319 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. வடுகன் பிள்ளானான ஆலால சுந்தரபட்டன் | குடுமியான் மலை | சடையவர்மன் வீரபாண்டியன் | 13 | 367 and 601 |
| 8. ஆலால சுந்தரபட்டன் | ,, | ,, | 15 | Pd. 374 |
| 9. ஆலால சுந்தரப் பெருமாள் சூர்ய தேவன் | ஆதனூர் | மாறவர்மன் வீர பாண்டியன் | 47 | Pd. 454 |
| 10. ஆலால சுந்தர பட்டர் | நெடுங்குடி | சடைய வர்மன் சுந்தர பாண்டியன் | 11 | 482 |
| 11. சுந்தர நாயனார் உலகுடையார் | ஆதனூர் ராங்கியம் | மாறவர்மன் வீர பாண்டியன் | 47 | 454<br>669 |
| 12. திரிபுவன சுந்தர பட்டன்; தமையன் சுந்தர பட்டன் | சித்தூர் | முதல் இராச ராசன் | 5 | Pd. 83 |
| 13. க...வன் சுந்தரபெருமாள் | பில்லமங்கலம் | சடையவர்மன் குலசேகரன் | 32 | Pd. 409 |
| 14. சுந்தரப் பெருமாள் | தூர்வாசபுரம்<br>ஊளையூர் | சடையவர்மன் ஸ்ரீவல்லபன் | | Pd. 946<br>Pd. 981 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15. திருநெல்வேலி கீழை மடஸ்தானத்து அணுக்க வன்றொண்டர் | திருநெல்வேலி | கோநேரின்மை கொண்டான் | - | S. I. I. V. No.540 |
| 16. மன்றாடி அமராவன் வன்றொண்டன் | வேப்பங்குளம் | இராசேந்திரன் I | 6 | S. I. I. Viii No. 6 |
| 17. சேரமான் தோழன் | திருப்புகலூர் | இராசராசன் II | 3 | 87 of 1928 |
| 18. ,, | திருநெல்வேலி | சடையவர்மன் வீரபாண்டியன் | - | S. I. I. Vol. V No. 443 |
| 19. சேரமான் தோழன் | குடுமியான் மலை | சடையவர்மன் வீரபாண்டியன் | 15 | Pd - 37 |
| 20. சேரமான் தோழன் | கீரனூர் | பரகேசரி இராசராசன் II | 28 | Pd - 198 |
| 21. சித்தி நம்பியாரூரனான தம்பிரான் தோழன்; தம்பிரான் தோழன் | குடுமியான் மலை | மாறவர்மன் சுந்தரபாண்டியன் | - | Pd. 290, 291, 319 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. தம்பிரான் தோழன் | சேரனூர் | சடையவர்மன் சுந்தரபாண்டியன் | 3 | Pd. 500 |
| 23. சக்தி நம்பிரான் தம்பிரான் தோழன் | சேரனூர் | மாறவர்மன் குலசேகரன் I | 12 | Pd. 553 |
| 24. கலயன் குமரனான தம்பிரான் தோழன் | திருவலம்புரம் | - | - | 216 of 1925 |

# புதிய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| கம்பர் விருந்து | ஔவை நடராசன் | 90.00 |
| அமைதி | பாவேந்தர் பாரதிதாசன் | 30.00 |
| எழில் விருத்தம் | பாவலரேறு வாணிதாசன் | 40.00 |
| முன்னும் பின்னும் | கவிஞர் சுரதா | 90.00 |
| சிறந்த சொற்பொழிவுகள் | ,, | 60.00 |
| காவடிச்சிந்தும் கவிஞன் வரலாறும் | அரங்க.சீனிவாசன் | 80.00 |
| அகப்பொருளில் அச்ச மெய்ப்பாடு | அ.வெ.சுப்பிரமணியன் | 100.00 |
| கடல்கொண்ட தென்னாடு முதல் சிந்துவெளி வரை | முனைவர் இரா.மதிவாணன் | 65.00 |
| சிலம்பின் காலக் கணிப்பு | ,, | 80.00 |
| தொல்காப்பியர் காலம் | ,, | 65.00 |
| சொல்லாய்வுக் கட்டுரைகள் | ,, | 85.00 |
| தமிழாய்வில் கண்ட உண்மைகள் | ,, | 100.00 |
| கல்வெட்டில் தேவரா மூவர் | பேராசிரியர் கா.ம.வெங்கடராமையா | 28.00 |
| எழுச்சி முழக்கம் | டாக்டர் சா.சகத்ரட்சகன் | 45.00 |
| காணிப் பழங்குடி மக்களின் பாடல்களும் வழக்காறுகளும் | முனைவர் யோ.தர்மராஜ் | 85.00 |
| சங்க இலக்கியத்தில் அகவுணர்வு உயிரினப் பயன்பாடு - நற்றிணை | ச.பொ.சீனிவாசன் | 70.00 |
| நாடார் வழக்காறுகளில் மக்கள் இடம் பெயர்வும் வரலாறும் | சு.தாமரை பாண்டியன் | 60.00 |
| நடுநாட்டில் சமணம் | ந.வேங்கடேசன் | 50.00 |
| தேவாரத்தில் இசைக் கருவிகள் | ,, | 32.00 |
| இலக்கிய வண்ணங்கள் | கவிமாமணி கல்லாடன் | 90.00 |
| விண்ணைத் தொடும் எண்ணங்கள் | என்.இராஜசேகர், இ.ஆ.ப. | 40.00 |
| வளமையின் வாயில்கள் | ,, | 35.00 |
| பாவேந்தர் புரட்சி நூறு | பாவலர் இலக்கியன் | 30.00 |
| வாணிதாசன் படைப்புகள் ஓர் அறிமுகம் | தேவி.திருவளவன் | 40.00 |
| புதுவை இலக்கணச் செம்மல் | சி.இரமேஷ் | 36.00 |

| | | |
|---|---|---|
| ஈரம் | திலகவதி | 50.00 |
| கொழுந்து | கோவி.கலியபெருமாள் | 30.00 |
| சின்னச் சின்ன கதைகள் | ஆ.கோவிந்தராஜுலு | 30.00 |
| அழகின் சாட்சி | கவிஞர் சோதிதாசன் | 32.00 |
| தேசீயம் பேசும் பெருமைகள் | கிளமெண்ட் ஈஸ்வர் | 25.00 |
| புதுவைக்கு புகழ் சேர்த்த பெண்மணிகள் | ,, | 110.00 |
| அறிஞர் பி.எல்.சாமியின் ஆய்வுக் கட்டுரைகள் | பி.எல்.சாமி | 45.00 |
| வீரமங்கையர் | புலவர் ம.அய்யாசாமி | 52.00 |
| நீதி நூல்கள் 8 | ,, | 26.00 |
| வில்லியனூர் விடுதலைவீரர் | முத்து. சுந்தரமூர்த்தி | 80.00 |
| குமரிகண்டம் மூழ்கவில்லை | கொடுமுடி சண்முகம் | 46.00 |
| முடத்தாமக்கண்ணி | சக்கர இலக்குமி நாதன் | 35.00 |
| வழக்கிழந்த தமிழ்ச் சொற்கள் | அனந்தபுரம் கிருட்டினமூர்த்தி | 22.00 |
| வரலாற்றில் பெண்ணாடகம் | ச.கிருஷ்ணமூர்த்தி | 50.00 |
| அறிவியலும் இலக்கியமும் சில மதிப்பீடுகள் | நெல்லை சு.முத்து | 100.00 |
| திறனாய்வுச் சுடர் | மறைமலை இலக்குவனார் | 80.00 |
| திரைச் சிந்தனைகள் | க.ஜெயபாலன் | 32.00 |
| செம்மொழிச் சிந்தனைகள் | முனைவர் மு.முத்துவேல் | 40.00 |
| பாவேந்தர் படைப்பில் அங்கதம் | கவிஞர் முருகு.சுந்தரம் | 70.00 |
| தமிழிலக்கியத்தில் காஞ்சி மாநகரம் | முனைவர் சி.இரத்தினம் | 50.00 |
| பாவேந்தருடன் | குடந்தை புகழேந்தி | 32.00 |
| நெடுநல்வாடை | நலங்கிள்ளி | 18.00 |
| பேரறிஞர்களின் உவமைகள் | கே.எஸ்.லெட்சுமணன் | 28.00 |
| தமிழ் சிறுகதைகளில் மனித நேயம் | மு.பரமசிவம் | 42.00 |
| திரையுலகின் விந்தன் | ,, | 50.00 |
| பாவேந்தரின் குயில் பூங்கா | இளமாறன் | 28.00 |
| தாயுமானார் கதை | வெள்ளையம்பட்டு சுந்தரம் | |
| துடிக்கின்ற மனமொன்று | சசிரேகா | 90.00 |
| வாழ்வில் வெற்றி | பா.ஜம்புலிங்கம் | 46.00 |
| நடிகையின் கதை | மு.பரமசிவம் | 46.00 |

| | | |
|---|---|---|
| வரலாற்றில் பெண்ணாடகம் | ச.கிருஷ்ணமூர்த்தி | 50.00 |
| அறிவியலும் இலக்கியமும் சில மதிப்பீடுகள் | நெல்லை சு.முத்து | 100.00 |
| திறனாய்வுச் சுடர் | மறைமலை இலக்குவனார் | 80.00 |
| திரைச் சிந்தனைகள் | க.ஜெயபாலன் | 32.00 |
| செம்மொழிச் சிந்தனைகள் | முனைவர் மு.முத்துவேல் | 40.00 |
| பாவேந்தர் படைப்பில் அங்கதம் | கவிஞர் முருகு.சுந்தரம் | 70.00 |
| தமிழிலக்கியத்தில் காஞ்சி மாநகரம் | முனைவர் சி.இரத்தினம் | 50.00 |
| பாவேந்தருடன் | குடந்தை புகழேந்தி | 32.00 |
| நெடுநல்வாடை | நலங்கிள்ளி | 18.00 |
| பேரறிஞர்களின் உவமைகள் | கே.எஸ்.லெட்சுமணன் | 28.00 |
| தமிழ்ச் சிறுகதைகளில் மனித நேயம் | மு.பரமசிவம் | 42.00 |
| திரையுலகில் விந்தன் | ” | 50.00 |
| பாவேந்தரின் குயில் பூங்கா | இளமாறன் | 28.00 |
| துடிக்கின்ற மனமொன்று | சசிரேகா | 90.00 |
| வாழ்வில் வெற்றி | பா.ஜம்புலிங்கம் | 46.00 |
| நடிகையின் கதை | மு.பரமசிவம் | 46.00 |
| தாயுமானார் கதை | வெள்ளையம்பட்டு சுந்தரம் | 25.00 |

குறிப்பு

# கல்வெட்டில் தேவார மூவர்

பேராசிரியர்
கா.ம.வேங்கடராமையா